Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...





C/638

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 13 செவ்வாய்க்கிழமை (26.04.2011) பக்கங்கள் 12 ஓசை - 209

## போர்க்குற்றம் தொடர்பான விசாரணைவேண்டும் உலகளாவிய ஜனநாயக அமைப்பு கோரிக்கை



நெல்சன் மண்டேலா தலைமையிலான உலகளாவிய ஜனநாயக அமைப்பு இலங்கையின் போர்க குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு வலியுறுத்துகின்றது.

சர்வதேச நாடுகளின் முக்கிய தலைவர்கள் பலர் ஒன்று சேர்ந்து தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தலைமையில் "த எல்டர்ஸ்"எனும் பெயரிலான அமைப்பொன்றை உருவாக்கிக் கொண்டுள்ளனர்.

அந்த அமைப்பின் ஒட்டு மொத்த உறுப்பினர்களும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். அது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிக்கை யொன்றையும் வெளியிட அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

த எல்டர்ஸ் அமைப்பில் நெல்சன் மண்டேலா, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் இந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.அறிக்கைக்கு கண்டனம்; கண்டியில் வெகுஜன போராட்டம்

(கண்டி)

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டி நகரில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.


கண்டி நகரிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் பதாகைகளை ஏந்தியவா்று இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம் பெற்றதாக தெரியவருகிறது.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள குறித்த அறிக்கை, நாட்டின் நட்பெயருக்கு களங்கம் ஏற்படக்கூடியவாறு தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆரப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையை உடனடியாக ரத்து செய்யக்கோரியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ மூனை இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.

# அவசரகாலச்சட்டத்தில் தளர்வு போருக்குப்பிந்திய புதிய நகர்வு

## பிரதமர் டி.எம்.ஜயரட்ண அறிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாதத்தடுப்புச்சட்டம் மற்றும் அவசரகாலச்சட்டம் ஆகியவற்றில் மேலும் பல தளர்வுகளை ஏற்படுத்தும் நோக்கில் புதிய திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன. இச் சட்டங்களில் காணப்படும் சில சரத்துக்கள் மக்களின் அன்றாட வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளதாகவும், அவற்றை நீக்குவதற்காகவே இந்த புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் பிரதமர் டி. எம். ஜயரட்ண அறிவித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு பிராந்தியத்துக்கு புதிய கடற்படைத்தளபதி

(கொழும்பு)

கடற்படையின் வடபிராந்திய கட்டளைத் தளபதியாக ரியர் அட்மிரல் ரவீந்திர சந்திரசிறி விஜேகுணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னர் மேற்குப் பிராந்தியக் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றியவர் என்று கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

ஏற்கனவே வட பிராந்தியத்துக்குப் பொறுப்பாக கடமையாற்றிய ரியர் அட்மிரல் துசித வீரசேகர தொண்டர் படையணியின் கட்டளையிடும் அதிகாரியாக நியமனம் பெற்றுச் சென்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ரவீந்திர சந்திரசிறி நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனத்துக்கும் அண்மையில் காணாமல் போன நான்கு கடற்படையினர்

(11ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை வழக்கு; நீதிபதிகள் குழு யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் கூட்டுப்படுகொலைப் புதைகுழியைப் பார்வையிட கொழும்பிலிருந்து நீதிபதிகள் குழாம் நாளை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது. சிறுவயதுக் குழந்தைகள் இருவர் உள்ளிட்ட எட்டுப் பேர் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்டு, மிருசுவிலில் புதைக்கப்பட்டமை தொடர்பான வழக்கின் ஒரு நடவடிக்கையாகவே இவர்களது விஜயம் அமையவுள்ளது.

2000ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் மிருசுவில் வாசியான ஞானபாலன் ரவிவர்மன் மற்றும் இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட எட்டுப் பேரைத் துன்புறுத்திக் கொன்றது

(11ஆம் பக்கம் பார்க்க)

## தந்தைசெல்வா நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)



தந்தை செல்வநாயகம் அவர்களின் 34ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்க முன்றலில் இடம்பெறவுள்ளது.

தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவின் தலைவர் அருட்கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் ஆரம்ப

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீது பொருளாதாரத்தடை "நேட்டோ" கூட்டாளிகள் முயற்சி



(வாஷிங்டன்)

இலங்கைதொடர்பான ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையின் சிபார்சுகளை அடிப்படையாகக் கொண்டு 'நேட்டோ' நேசநாடுகள் இணைந்து இலங்கை மீது பொருளாதாரத்தடையை விதிப்பதற்கான சூழல் உருவாகிவருகிறது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை மீது நேட்டோ நேச நாடுகளின் கூட்டமைப்பின் மூலமாக உணவு, எரிபொருள் உள்ளிட்ட பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் சாத்தியங்கள் காணப்படுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை அடித்தளமாகக் கொண்டு அவ்வாறானதொரு நடவடிக்கைக்கு நேச நாடுகளின் கூட்டமைப்பு தயாராகி வருவதாக பெரும்பாலான சிங்கள இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் நிபுணர் குழு அறிக்கையை மையமாகக் கொண்டு இலங்கையை ஜனநாயக விரோத நாடாக பிரகடனப்படுத்தவும் நேட்டோ கூட்டமைப்பு கவனம் செலுத்தி வருகின்றது. அவ்வாறு நடக்கும் பட்சத்தில் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து இலங்கைக்குக் கிடைக்கும் பொருளாதார ஒத்துழைப்புகள் மற்றும் உதவிகள் தடைப்படலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# முல்லையில் மீள் குடியேற்றம் நேற்று மீளாய்வுக் கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பாகவும், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முல்லைத் தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மீள்குடியேற்ற அமைச்சின் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களுடைய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அரச அதிகாரிகள் மற்றும் அரச சார்பாற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடினார்.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குமுழமுனை மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசங்கள் மீளக்குடியேறிய மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகக் குறிப்பாக வீடுகள் அற்றநிலையில் தறப்பாள்களினால் அமைக்கப்பட்ட கூடாரங்களிலேயே வாழ்கின்றனர்.

தற்போது பெய்துவரும் மழையினால் இம்மக்கள் பெரும் அல்லல் படுவதாக அமைச்சரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டது.

இப்பகுதி மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்த பிரதி அமைச்சர் குறித்த பகுதி மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தற்காலிகமாக வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இதைவிட புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன் ஆகிய பிரதேசங்களில் மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பாக கவனமெடுத்து அப்பிரதேசங்களில் காணப்படும் கண்ணிவெடிகளை அகற்றி இங்கு மக்களை மீளக்குடியேற்றம் செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் இதன் போது தெரிவித்தார். (02)

# கிளிநொச்சியில் கசிப்பு பொலிஸார் முற்றுகை



(முரசுமோட்டை)

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கடந்த வாரம் திடீர் சோதனையை மேற்கொண்ட பொலிஸார் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவந்த ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

குறித்த நபரை நேற்றைய தினம் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி மேற்கொண்ட விசாரணையின் பின்னர் குறித்த நபருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகச் செலுத்துமாறு தீர்ப்பளித்ததுடன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். (110)

# தள்ளாத வயதினிலும் படியேறும் அவல நிலை

## சமூக சேவைத் திணைக்களம் கண் திறக்குமா?

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதி தொடர்பான கருமங்களுக்கான யாழ்பிராந்திய தொழில் திணைக்கழத்திற்குச் செல்வதில் அதன் பயனாளிகள் பெரிதும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகச் சேவையைப் பெற்றுக் கொள்ளச் செல்லும் ஊழியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பிராந்திய தொழில் திணைக்களம் வீரசிங்கம் மண்டபத்தின் 4ஆம் மாடியிலேயே இயங்குகிறது. இந்த அலுவலகத்திற்கு 100 படிகள் அளவில் ஏறியே செல்ல வேண்டிய நிலை உள்ளது.

ஊழியர் சேமலாப நிதி தொடர பான விபரங்கள் சேவைகளைப் பெறுவதற்குச் செல்வபர்கள் அனேகமானவர்கள் ஓய்வுபெற்றவர்களாகவே உள்ளனர்.

முதுமையில் இவர்கள் படியேறிச் சென்று சேவையைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

தனியாக வருபவர்கள் அங்கு வேறு தேவைகளுக்காக வருபவர்களின் உதவியை நாடியே படியேறும் நிலை காணப்படுகிறது.

நோயாளிகள், முதியவர்களுக்காக அலுவலக ஊழியர்கள் சேவை மனப்பாங்குடன் கீழ்த்தளத்திற்குச் சென்று அவர்களிற்குச் சேவையை வழங்குகின்றார்கள்.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு குறித்த அலுவலகத்தை கீழ் தளத்தில் அல்லது வேறு பொருத்தமான இடத்தில் அமைக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் எனப் பயனாளிகள் கோரிக்கை விடுகின்றார். (கா)

# யாழ்.பிரேத அறையில் மீண்டும் குளிரூட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையின் குளிரூட்டி சீர்செய்யப்பட்டுள்ளது என வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா தெரிவித்துள்ளார். குளிரூட்டி பழுதடைந்துள்ளது பற்றி கேட்கப்பட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாது குளிரூட்டி பழுதடைந்திருந்தது. தற் போது அது திருத்தப்பட்டு மீள இயங்குகிறது என்கிறார்.

போதனாவைத்தியசாலையின் பிரேத அறை குளிரூட்டி செய்ற்படாது இருப்பதால் அங்கு வைக்கப்படும் உடலங்கள் சரியான முறையில் பாதுகாக் கப்படுவதில்லை எனவும் இதனால் உடலங்கள் விரைவாக பழுதடைவதாக இறந்தவர்களது உறவினர்கள் விசனம் தெரிவித்தனர்.

தற்போது குளிரூட்டி சீராக்கப்பட்டதால் உடலங்களைச் சரியான முறையில் பாதுகாக்கக கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (கா)

# பனை மரம் ஏறும் இயந்திரம் யாழ்.குடாநாட்டில் அறிமுகம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மாவட்ட பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அவர்களின் அன்றாடசீவல் தொழிலினை இலகுவாகப் பயன்படுத்துவதற்கும் இலகு பொறிமுறைவசதிகள் கொண்ட பனை ஏறும் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.


வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன வற்றின் தலைவர் பொது முகாமையாளர்களுக்கான மாதாந்த அபிவிருத்திக்கலந்துரையாடல் கூட்டத்தில் சிறப்பு பிரதிநிதியாகக் கலந்துகொண்டு யாழ்.மாவட்ட பனந்தொழில் அபிவிருத்தி தொடர்பாக உரையாற்றும்போது தெரிவித்தார்.

மேற்படி பனையேறும் இயந்திரம் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டு கொழும்பு பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு அறிமுகம் செய்து அதனை இலகு பொறிமுறையாக்குவதற்கான முயற்சிகளிலும் பனை அபிவிருத்திச் சபை ஈடுபடுவதாகத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், மேற்படி பனையேறும் இயந்திரத்தினை யாழ்.மாவட்டத்தில் உள்ள 19 பனை தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும், மேற்படி இயந்திரத்தினை சம்பிரதாய பூர்வமாக அறிமுகப்படுத்தி வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தா. (27)

# ஐ.நா.அறிக்கை குறித்து கருத்துக் கூறமாட்டேன்

## யாழ். ஆயர் கூறுகிறார்



(யாழ்ப்பாணம்)

நிபுணர்குழு அறிக்கை குறித்து கருத்துக்கள் எதனையும் கூற விரும்பவில்லை என்று யாழ். ஆயர் 'திவயின' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையான திவயின பத்திரிகையின் செய்தியாளர் ஒருவர் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாரைத் தொடர்பு கொண்டு ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை குறித்து கருத்துக்கேட்டபோதே அவர் இவ்வாறு கூறியதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் அரசியல் விடயங்களில்தான் கருத்துக்கூற விரும பவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கும் அவர், தாங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதையும் குறித்த செய்தியாளரிடம வலியுறுத்தியுள்ளதாகவும் அச் செய்தி குறிப்பிடுகின்றது.

அதற்கிடையே திவயின பத்திரிகை பிரஸ்தாப விடயம் தொடர்பில் மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் அடிகளாரைத் தொடர்பு கொண்டபோது, நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் தன் கருத்துக்களை ஒரு அறிக்கையாகத் தயார்படுத்திக் கொண்டிருப்பதாகவும், அதனை மிக விரைவில பத்திரிகைகளுக்கு அனுப்பு வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் மலேரியா வருடாந்தம் 450 பேர்பலி

(கொழும்பு)

உலக மலேரியா தினம் இன்றாகும். வருடாந்தம் ஏப்ரல் 25ம் திகதி உலக மலேரியா தினமாக ஐ.நா.சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மலேரியா நோயினால் பாதிகக்கப்பட்டு வருடத்திற்கு 10இலட்சம் பேர்வரை உயிரிழப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழப்பவர்களில் அதிகமானோர் 5 வயதிற்கும் கீழ்பட்ட சிறுவர்கள் என்பது மிகவும் அபாயகரமான வியடமாகும்.

இலங்கையில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டு வருடாந்தம் 450 மரணங்கள் சம்பவிப்பதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடும் காய்ச்சல், கண்சிவத்தல், உடம்பு வலி மற்றும் உடல முடியாமை என்பன மலேரியா நோய்க்கான அறிகுறிகளாகும். மலேரியா நோய் ஏற்பட்டுள்ளவர்கள் விரைவில் சிகிச்சை பெறாவிடின் அதன் மூலமாக பல நோய்கள் உண்டாக வாயப்பு உண்டு.

மலேரியா தடுப்பு திட்டங்கள் மூலம் இலவச சிகிச்சையைப பெறமுடியும். மலேரியா நோயிலிருந்து விடுபட நோயை ஏற்படுத்தும் நுளம்புகளை இல்லாது ஒழிப்பது அவசியமென சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# மண்டைதீவில் மதகு சேதம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பிரதான வீதியில வழிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த மதகு இடிந்து விழுந்துள்ளது. கடல் நீர் பெருக்கெடுக்கும் போது வீதியின் குறுக்கே நீர் பாயாது இம் மதகின் வழியே மறுகரையைக் கடல் நீர் போய்ச் சேர்வது வழக்கம். இந்நிலையில் இம் மதகு உடைந்து விழுந்துள்ளமை இனிவரும் மழை காலங்களில் இவ் வீதியூடான போக்குவரத்தில் பாரிய இடையூறுகளை ஏற்படுத்தும்.

அத்துடன் கடல் அலையின் தாக்கம் காரணமாக வீதியின் கரை, கடல் நீரால் அரிக்கப்படும் நிலையும் ஏற்பட வாய்ப்பிருப் பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

# திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

மாவட்டச் செயலக விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நெல்லியடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடத்தி விலைப்பட்டியலைப் பார்வைக்கு வைக்காத வர்த்தகர்கர் மற்றும் உரிய விலையைவிட அதிக விலைக்குப் பொருட்களை விற்ற சுமார் 65 வர்த்த நிலையங்களைக் கண்டு பிடித்துள்ளனர். (18)

கண்களில் பார்வை இருப்பது போல், கேட்கும் சக்தி காதுகளுக்கு இருப்பது போல், நாவுக்கு ருசி அறியும் சக்தி இருப்பது போல், எல்லா ஜீவராசிகளிடமும் தெய்வத்துவம் இருக்கிறது.

- பாபா -

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஒற்றுமையின் இலட்சணம் இதுவா?

வவுனியா நகரசபைத் தலைவராக இருந்த எஸ்.எம்.ஜி.நாதன் பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து, பல மாதங்களாக தலைவர் இன்றி அச்சபை இயங்கிவருகிறது. இந்த அவல நிலையை எண்ணி அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

2009ஆம் ஆண்டு நகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதையடுத்து, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாதன் தலைமைப் பதவியை ஏற்றிருந்தார்.

மும்மொழிகளிலும் ஆற்றல் பெற்றிருந்த இவர், நகரபிதா என்ற முறையில் அங்கு நடைபெறும் அரச வைபவங்களில் கலந்துகொள்வதில் தவறுவதில்லை.

பிரதமர் டி.எம்.ஜெயரட்ண கலந்துகொண்ட வைபவம் ஒன்றில், பார்வையாளராக அமர்ந்திருந்த இவரை, நகரபிதா என்று அறிந்தவுடன் பதவிக்கு மதிப்பளித்து தனது அருகில் அமர்த்தியதாக அப்போது செய்திகள் வெளியாகியிருந்தன.

நகரபிதா ஒருவருக்கு உரிய கௌரவம் தங்களுக்கு இல்லையே என்ற ஆதங்கம் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு இருந்துவந்தது. அரச வைபவங்களில் கலந்துகொள்ளாத இவர்கள் அவர்கள் மீது ஊழல் குற்றச் சாட்டுக்களைச் சுமத்திப் பதவி விலகச் செய்தனர்.

அவர் பதவியை இராஜினாமாச் செய்து மூன்று மாதங்கள் ஆகியும் புதிய தலைவரை நியமிப்பதில் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் நிலவிவந்த ஒன்றுமையீனம் தாமதங்களை ஏற்படுத்தியிருந்தது. இதனால், நகர அபிவிருத்தி பாதிப்படையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி பாதிப்படைவதினால், கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆனால், வவுனியா நகர வரியிறுப்பாளர்களே பெரிதும் பாதிப்படைய வேண்டியிருந்தது.

அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்துகொண்டு அரசிடமிருந்து கிடைக்கப்பெறக்கூடிய அத்தனை அனுகூலங்களையும் பெற்று அதனை அனுபவித்து வருபவர்களுக்கு மக்களின் கஷ்டம் எங்கே தெரியப்போகின்றது.

20 வருடங்களாக சகல வசதிகளுடனும் கூடிய அரச விடுதியில் வசித்து வரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியைச் சேர்ந்த சிவசக்தி ஆனந்தனே தலைவர் தெரிவில் முட்டுக்கட்டை போட்டு வருவதாக வரியிறுப்பாளர்கள் வெளிப்படையாக கூறிவருவதாகச் செய்திகள் வெளிவந்தவண்ணமுள்ளன.

கடந்த ஒரு வருட காலமாக எதுவித அபிவிருத்தியும் இன்றி வவுனியா நகரம் 'நரகமாகி' இருப்பதாகவும், மாதாந்தக் கூட்டங்கள் எதுவுமின்றி அபிவிருத்திக்குரிய நிதியைப் பெறமுடியாத நிலையில் இருப்பதாகவும் வரியிறுப்பாளர்கள் தமது கவலைகளை பல்வேறு வழிகளிலும் வெளியிட்டு வருவதனையும் காணமுடிகிறது.

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பிக்களிடையே நீண்ட காலமாக நிலவிவரும் ஒற்றுமையீனம் அபிவிருத்தி வேலைகளில் பாதிப்பு ஏற்படுத்தி வருவதை, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாம்தான் என மார்பு தட்டும் சம்பந்தர் திருக்கூட்டம் அறியுமா?

அவர்கள் மக்களோடு மக்களாக இருந்தால்தான் இக்கஷ்டங்கள் அவர்களுக்குத் தெரியவரும். ஏதோ சாட்டுப் போக்குகள் சொல்லி இந்தியாவிலும், சிங்கப்பூரிலுமுள்ள தமது சொந்தங்களைச் சந்தித்து குசலம் விசாரிப்பதில்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிக்குரிய சலுகைகளை அனுபவித்து வருகின்றார்கள்.

இவர்களை தமிழ் மக்களின் இரட்சகர்கள் என்று கூறலாமா? ஒரு நகர சபையை சீராக நிர்வகிக்கக் கூடிய ஒற்றுமை, அரசியல் சாணக்கியம் இல்லாத இவர்களை தமிழ் மக்கள் தொடர்ந்தும் நம்பலாமா?

பதவி வெறிபிடித்து சுகபோகங்களை அனுபவிக்கத் துடித்து, அலைந்து திரியும் இவர்கள், மக்களுக்கு நாம் ஒன்றுபட்டுவிட்டோம் என்று கூறி ஏமாற்றி வருகிறார்கள். இந்த ஒன்றுபட்ட தன்மையை வவுனியா நகரசபைத் தலைவர் தெரிவில் காட்ட முடியாது திணறுவது ஏன்?

-ஆசிரியர்-

# நிபுணர் குழு அறிக்கைக்கு பதிலளிப்பதில் தன்னடக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்!

## பிரைடே போரம் வலியுறுத்துகிறது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்குப் பதிலளிக்கும் விடயத்தில் தன்னடக்கத்தைக் கடைப்பிடிக்குமாறு பிரைடே போரம் வலியுறுத்தியுள்ளது.



இலங்கையின் பதிலளிக்கும் கடப்பாடு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து செயலாளர் நாயகத்துக்குப் பதிலளிப்பது தொடர்பாகப் பொறுமையான உணர்வுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் செயற்படவேண்டும் என கரிசனையுடைய பிரஜைகளின் ஒன்றுபட்ட அமைப்பான பிரைடே போரத்தின் (வெள்ளிக்கிழமை மன்றம்) சார்பில் இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜயந்த தனபால வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில தெரிவித்திருப்பதாவது, இலங்கை தொடர்பான பான் கீ மூனின் நிபுணர் குழுவின் அறிக்கையின் ஒரு பகுதியானது கசியவிடப்பட்டதைத் தொடர்ந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளியிடப்பட்டுள்ள ஆரம்பக் கட்டப் பிரதிபலிப்புக்களையிட்டு பிரைடே போரம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

முழுமையான அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் வரை அறிக்கை தொடர்பான பூரணமானதும், நியாயமானதுமான கணிப்பீடு தேவையானதாகும்.

இலங்கை மோதலின் இறுதிக் கட்டங்களின்போது சர்வதேச மனிதாபிமான, மனித உரிமைகள் சட்டம் மீறப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாகப் பதிலளிக்கும் கடப்பாடு பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கும் தனது ஆணைக்கு அப்பால் நிபுணர்கள் குழு சென்றுள்ளதா என்பதைப் பூரணமான அறிக்கையே சுட்டிக்காட்டும்.

அத்துடன் நாட்டின் இறைமை, மனிதாபிமான, மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளின் பிரயோகத்தன்மை என்பன அந்த விடயத்தில் இணங்கிச் செல்ல முடியுமா என்பது பற்றி தெளிவுபடுத்திக் கொள்ளவும் முழுமையான அறிக்கை உதவக்கூடும்.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் நாம் இணங்கிக் கொள்ளாத விடயங்களும் அதேசமயம் செயற்படுவதற்கு பயனுள்ள விடயங்களும் சில சமயம் இருக்கக்கூடும்.

எமது பிரஜைகளின் சிறப்பான நலன்கருதி இலங்கைப் பிரஜைகளாகிய நாங்கள் ஆக்க பூர்வமான மனப்பாங்குடன் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய தேவை உள்ளது. கடுமையான தொனியுடனான பேச்சுகள், செயற்பாடுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயற்படுமாறு சகல தரப்பினரையும் நாம் வேண்டுகின்றோம்.

இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், இலங்கையிலுள்ள பல்வேறு குழுக்கள், சர்வதேச சமூகம் ஆகியவற்றை சம்பந்தப்படுத்திய முரண்பாடான சூழ்நிலையானது கசப்பான மோதலின் பின்னர் கடுமையான முறையில் வென்றெடுத்த சமாதானம் மற்றும் நல்லிணக்கம் புனர்வாழ்வு, அபிவிருத்தி என்பனவற்றுக்கான இலக்கு என்பனவற்றை பின்னடைவு காணச் செய்துவிடும்.

மோதலின்போது உணர்வு ரீதியான காயங்களால் பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன. ஒரு புறம் கடும் தேசியவாத பிரதிபலிப்புகளும் மறுபுறம் விகாரமான வெளிமட்டத் தலையீடுகளும் உணர்வு ரீதியாக ஏற்பட்ட காயங்களை அதிகரிக்கச் செய்துவிடும்.

ஆதலால், அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்குப் பதிலளிக்கும் விடயத்தில் ஆகக் குறைந்தளவிலாவது பொறுமையைக் கடைப்பிடித்து செயற்பாட்டுத் திறனுடனான இராஜதந்திர கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம் என இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுள்ளது.

# கண்ணிவெடிகளை அகற்றி மக்களை மீள்குடியமர சகலரும் ஒத்துழைக்குக

## யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அகற்றப்படாத இடங்களிலுள்ள மிதிவெடிகளை அகற்றி அப்பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளகுடியமர்த்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், கடந்த 30 வருட காலமாக நடைபெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்விடங்களைவிட்டு வெளியேறி வாழ்ந்து வரும் நிலையில், மக்கள் தற்போது அவர்களின் சொந்த இடங்களில் படிப்படியாக மீளக் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

மக்களை முழுமையாக மீளக் குடியமர்த்துவதற்கு மிதிவெடிகள், கண்ணிவெடிகள் தடையாக உள்ளன. எனவே, வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பிரதேசங்களில் மக்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் மிதிவெடிகளை அகற்றுவதில் ஹலோ ரஸ்ட், டெனிஸ் மிதிவெடி அகற்றும் குழுவினர், இராணுவ மனிதாபிமான வெடியகற்றும் அணியினர் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள இவர்களை நாம் பாராட்டுகின்றோம் என்றார். (கா)

# சந்தைக்கு காணி ஒதுக்கப்பட்டும் கட்டடம் அமைக்கப்படவில்லை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பாரதிபுரம் பொதுச சந்தைக்குக் காணி ஒதுக்கப்பட்டும் கட்டடங்கள் அமைத்துக்கொடுக்கப்படாமையால் வர்த்தக நடவடிக்கைகள் வீதியோரங்களிலேயே இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரணைமடுச் சந்திக்கு அருகில் முன்னர் இயங்கி வந்த இச்சந்தைக்கு காணி ஒதுக்கப்பட்ட நிலையில் கட்டடங்கள் இன்றி பாரதிபுரம் வீதியின் இரு மருங்கிலும் மீன்சந்தையும், மரக்கறிச் சந்தையும் மற்றும் ஏனைய வியாபார நடவடிக்கைகளும் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு சுமார் 150 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் இயங்கிவரும் வியாபார நடவடிக்கையினால் பகல் வேளைகளில் வாகனப் போக்குவரத்துப் பெரும் சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (110)

# கடற்பகுதியை பாதுகாப்பதற்கு தடுப்புச்சுவர் அமைக்கக்கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பிராந்தியத்தில் தொண்டமனாறு முதல் தும்பளை வரையான கடற்பகுதியின் வான் ஆழமாக்கப்படவேண்டும் எனவும், கடற்பகுதியைப் பாதுகாக்கும் வகையில் தடுப்புச்சுவர் அமைக்கப்படவேண்டும் எனவும் வடமராட்சி கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் ம. எமிலியாம்பிள்ளை அண்மையில் நடைபெற்ற வடமராட்சி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது கரையோரப் பகுதிகள் பெருமளவு சேதமடைந்து வருவதாகவும், இதனைத் தடுக்கும் வகையில் தடுப்புச் சுவர் அமைக்கப்படுவது அவசியமாகும் எனவும், தடுப்புச் சுவர் இல்லாமல் இப்பகுதி மீனவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவித்த அவர் இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். (100)

# பெண்களுக்கெதிரான வன்முறைகளை மிகக் கவனத்துடன் கையாளவேண்டும்



(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கெதிரான வன்முறைச்சம்பவங்கள் மத்தியஸ்தர் சபைக்கு ஆற்றுப்படுத்தலுக்கு வரும்போது அவற்றை மத்தியஸ்தர்கள் வெகு கவனமாக கையாள வேண்டும் இதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவது அவசியமாகும் என்று மத்தியஸ்தர்சபை வளவாளர் பாஸ்லி புகாரிதீன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான பயிற்சியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மிலேனியம் விருந்தினர் விடுதியில் மத்தியஸ்தம் மற்றும் மத்தியஸ்தப் பயிற்சி நிர்வாகத்தினால் நடத்தப்பட்ட "பெண்களுக்கெதிரான வன்முறைகளை மத்தியஸ்தம் செய்தல் தொடர்பான பயிற்சியில் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இலங்கை பூராகவும் 325 மத்தியஸ்தர் சபைகள் இருக்க வேண்டிய நிலையில் தற்போது 302 மத்தியஸ்தசபைகளே இயங்கிவருகின்றன. ஏனைய 23 மத்தியஸ்தசபைகளும் வடக்கு கிழக்கில் தான அமைக்கப்படவேண்டும். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை ஓரளவுக்கு மத்தியஸ்த சபைகள் அமைக்கப்பட்டு அவை தற்போது செயற்பட்டு வருகின்றது.

வடக்கில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இச்சபைகள் ஏற்கனவே அமைக்க முடியாது போய்விட்டது. மீதமாகவுள்ள 23 சபைகளில் கூடுதலான சபைகள் வடக்கில் தான் அமைக்கப்படவேண்டியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 15 மத்தியஸ்த சபைகள் இருக்கவேண்டிய இடத்தில் 13 சபைகள் தான் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. மிகுதியாக உள்ள இரண்டும் விரைவில் அமைக்கப்படும்.

தற்போது நாட்டில் இயங்கிவரும் மத்தியஸ்த சபைகளில் சுமார் 7500 இற்கும் மேற்பட்டோர் மத்தியஸ்தர்களாகக் கடமை ஆற்றுகின்றனர். இச் சபைகளில் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. நாட்டிலுள்ள சனத்தொகையில் 23 வீதமானோர் பெண்களாக இருந்தும் அவர்களின் பங்களிப்பு குறைவாக இருப்பது வேதனை அளிக்கிறது. இங்குகூட 24 உறுப்பினர்களில் இரண்டு பெண்கள் மட்டுமே உறுப்பினர்களாக இச் சபையில் இடம் பெற்றுள்ளனர் என்று கூறிய அவர், மத்தியஸ்தசபை உறுப்பினர்களிடையே "நான்" என்ற அகங்காரம் இருக்கக் கூடாது. புரிந்துணர்வு, கூர்உணர்வு, ஒற்றுமை, தன்னடக்கம், சுயபெறுமதி(நம்பிக்கை) என்பன இருக்கவேண்டும் என்று கூறினார்.

இப்பயிற்சிச் செயலமர்வில் நீதி அமைச்சின் இணைப்பாளர் எசபாலடிசில்வா, சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11 இற்கு சைவசமயப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் வரணி ஆசிரிய மூலவள மத்தியநிலையத்தில் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

குறித்த பாடஆசிரியர்கள் செயலமர்வுக்கு வருகைதரும் போது தரம் 10,11 சைவசமய பாடப்புத்தகங்களையும் ஆசிரிய அறிவுரைப்பு வழி காட்டி மற்றும் க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாளையும் கொண்டு வருமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

# பதவியேற்பு வைபவமும் முதலாவது கூட்டமும்

(வவுனியா)

நெடுங்கேணி பிரதேச சபையில் தலைவர், உபதலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவமும் முதலாவது கூட்டமும் நாளை புதன்கிழமை நெடுங்கேணி பிரதேசசபை மண்டபத்தில் தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழரசுக்கட்சியிலிருந்து 8 பேரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து 4 பேரும், ஐ.தே.கட்சியில் இருந்து ஒருவரும் இப்பிரதேச சபையின் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (39)

# விபரங்களை பதிவு செய்தல்

(வடமராட்சி கிழக்கு)

வத்திராயன் கமக்கார அமைப்பின் கீழுள்ள விவசாயிகளில் இந்த முறை வெங்காயச் செய்கையில் ஈடுபடுவோர் தமது பெயர் விபரங்களை வத்திராயன் கமக்கார அமைப்பில் பதிவு செய்து கொள்ளுமாறு கமக்கார அமைப்பினர் கேட்டுக் கொள்கின்றனர். (38)

# கூரைத்தகடுகள் வழங்கிவைப்பு

(வடமராட்சி கிழக்கு)

உடுத்துறை J/430 கிராம அலுவலர் பிரிவில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களில் கூரைத்தகடுகள் வழங்கப்படாமல் இருந்த 30 குடும்பங்களுக்கு கடந்த 20 ஆம் திகதி அவை வழங்கப்பட்டுள்ளன.

இக் கூரைத்தகடுகள் உடுத்துறை கிராம அலுவலர் பிரிவில் வைத்து கிராம சேவையாளரினால் வழங்கப்பட்டுள்ளன.(38)

# சமுர்த்தி வங்கிச் சங்க அடிமட்ட மக்கள் ஆற்றலை மேம்படுத்தி வருவது பாராட்டுக்குரியது

## ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளர்

சமூகத்தில் அடிமட்டத்தில் உள்ளவர்களை இனம் கண்டு அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதில் சமுர்த்தி வங்கிகள் அளப்பரிய சேவையினை ஆற்றிவருவதாக ஈ.பி.டி.பி யின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அம்பலம் இரவீந்திரதாசன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி மத்தி சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால், சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி கடந்த வெள்ளிக் கிழமை கந்தர்மடம் ஜனசக்தி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற பொழுது, அதில் சிறப்பு வருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வங்கிக் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் பொ.சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்தகாலங்களில் வங்கிக் கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினராக தாம் செயற்பட்டு மக்கள் சேவையாற்றிவந்ததாகவும் அடிமட்ட மக்களின் சுய தொழில் திறன்களை வெளிக் கொண்டு வருவதில் சமுர்த்தி வங்கிகள் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

மேற்படி நிகழ்வில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் சங்கீதக் கதிரை, கயிறிழுத்தல் போன்ற போட்டிகளும் இடம்பெற்றன. (26)

# அபராதம் விதிப்பு

(சாவகச்சேரி)

அனுமதிப் பத்திரம் இன்றி முகமாலையிலிருந்து ஒரு கால் இழந்த பசுமாட்டை "டிகோ" வாகனத்தில் கொண்டு சென்ற சமயம் சாவகச்சேரி பொலிஸாரால் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் மா.கணபதிப்பிள்ளை முன்னிலையில் பொலிஸார் குற்றவாளிகளை ஆஜர் படுத்தியபோது குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்த நால்வருக்கும் 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிதததுடன் வாகனத்தையும் மாட்டையும் பிணையில் எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார்.(11)

# அஞ்சலி நிகழ்வு

(வவுனியா)

தந்தை செல்வாவின் 34 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு அஞ்சலி நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்டக் கிளைத் தலைவர் டேவிட் நாகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வவுனியா மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள அமரரின் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன், ஆலயங்களிலும் விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளது. (39)

# குடும்ப வன்முறை

மத்தியஸ்தம் மற்றும் மத்தியஸ்தப் பயிற்சி நிலைய அனுசரணையில் மத்தியஸ்தப்பயிற்சிப் பயிற்றுவிப்பாளர் சட்டத்தரணி மு.திருநாவுக்கரசினால் தொகுக்கப்பட்ட "குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம்" (2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கம்) இங்கு பிரசுரமாகிறது.

அறிமுகம்

இலங்கையில் குடும்ப வன்முறையானது பொதுவாக நிலவுகின்ற போதிலும், பெரும்பாலும் மறைக்கப்பட்டதொரு விடயமொன்றாகவே உள்ளது. குடும்ப வன்முறையானது அதிகளவில் ஏழ்மையான மற்றும் குறைந்த கல்வியறிவுடைய குடும்பங்களிலேயே அதிகளவில் இடம்பெறுவதாகப் பொதுவாக நம்பப்படுவதுடன் ஆய்வுகற்கைகளும் அதனை எடுத்துக் காட்டுகின்றன.

குடும்ப வன முறையானது பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நலனுக்கு மட்டுமன்றி, நாம் வாழும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் பிரச்சினையானதொன்றாக அடையாளங் காணப்பட்டுள்ளது. உலகத்தில் எல்லா நாடுகளிலும் போன்று இலங்கையிலும் குடும்பமே சமூகத்தின் சிறிய அலகாகின்றது. இலங்கையின் அடிப்படைச் சட்டமான அரசியல் யாப்பிலே அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அடிப்படைக் கோட்பாடுகளிலும் அடிப்படைக் கட்டுப்பாடுகளிலும் குடும்பம் என்ற அலகைப பாதுகாத்தல் அதன் இருப்பை உறுதி செய்தல் என்பன அரசின் பொறுப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடான இலங்கையில் குடும்ப வன் முறை என்பது பிரதானமாக இருப்பது அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தாமதமாக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக அமையும் என்பதனை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள முடியும். அதனால் காலத்துக்குக்காலம் இருக்கும் அரசினால் குடும்பம் என்ற நிறுவனத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன. குடும்ப வன்முறையுடன் சம்பந்தப்பட்ட சட்டம், குடும்பம் நிறுவனத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட புதிய சட்டமாகும். தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குடும்ப வன்முறை என்ற எண்ணக்கரு தொடர்பாக பல விதமான கருத்துக்கள் சமூகத்தில் நிலவுகின்றன. அதிலொன்று, இந்த எண்ணக் கரு மேற்கு நாடுகளிலிருந்து கீழைத்தேசம் வரை வலுக்கட்டாயமாகக் கொண்டு வரப்பட்டது என்பதாகும். அதே போன்று இந்த எண்ணக்கரு அமுல்படுத்தப்படுவதன் விளைவாக தேவையற்ற சுதந்திரத்தையும் மேலாதிக்கத்தையும் பெண்களுக்குக் கொடுப்பது என்பது பெரும்பாலானோரின் கருத்தாகும்.

இங்கு நாம் பெண்களுக் எதிரான வன்முறையை மட்டுமன்றிக் குடும்பம் என்ற அலகின் அனைத்து அங்கத்தவர்கள் மீது புரியப்படும் வன்முறைகள் பற்றியும் கலந்துரையாட எதிர்பார்க்கப்படுகின்றோம். ஆனால் சமூக விஞ்ஞானிகளின் அண்மைக்கால ஆய்வுகளின் படி வீட்டினுள் இடம பெறும் வன்முறை நடவடிக்கைகளினால் அதிகமாகப் பெண்களும் பிள்ளைகளும் பாதிக்கப்படுகின்றனர் என்பதாகும்.

அந்த வகையில் வன்முறையால் பாதிக்கப்படுகின்ற ஒருவரின் ஆளுமை பாதிக்கப்படுகின்ற அளவுக்கு, அவனின அல்லது அவளின் வினைத்திறன் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக அமைகின்றது. இன்னொரு வகையில் பார்க்கும் போது மனோநிலையும் பூரணமாகப் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படுகின்றது.


சிறு பராயத்தில் குடும்ப வன்முறைக்கு உள்ளான பிள்ளை பிற்காலத்தில் குற்றச்செயல் புரிபவராக வளர்வதற்கு உரிய வாய்ப்புக்கள் அதிகமாகும் என்பது தெரிய வருகின்றது. அவ்வாறான பிள்ளைகள் பெரியவர்களானதும் சமூகத்தில் உள்ள ஏனையவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்ற போது பல்வேறான பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்வதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அண்மைக் காலம் வரையில் சமூகத்தில் நிலவும் வன் முறைகளை தடுப்பதற்கு சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் இந்தாலும் குடும்பத்தில் இடம் பெறுகின்ற வன்முறைகளை நிறுத்தவும் பரிபாலிப்பதற்குமான சட்டங்கள் காணப்படவிலலை.

சட்டம் தொடர்பான கேள்வி பதில் நாளை தொடரும்

# நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படும்போது பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்யலாம்

## ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



(யாழ்ப்பாணம்)

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைச் சரியான வழியில் பயன்படுத்தி நாம் ஒத்த கருத்துடன் ஒருமித்துச் செயற்படு வதன் மூலமே பின்தங்கிய நிலையில் காணப் படுகின்ற எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்தார்.

கடந்த 22 ஆம் திகதி பாசையூர் திருநகர் கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந் துரையாடலில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாரிய நிதி ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடனும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு அவற்றினைப் புனரமைப்புச் செய்துதர நடவடிக்கைகளை மேற்கொள் வேன்.

அவ்வாறே கடந்த காலங்களில் ஏற்பட்ட மனக்கசப்பான சம்பவங்களை மறந்து நாம் அனைவரும் ஒத்தகருத்துடன் ஒருமித்துச் செயற்படுவதன் மூலம் பின்தங்கிய நிலையில் காணப்படும் எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

யுத்தம் மற்றும் வேறு பல காரணங்களால் சேதமடைந்த திருநகர் முன்பள்ளியினைப் புனரமைத்துத் தருமாறும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் திருநகர் சமூக அபிவிருத்தி சபை என்பவற்றின் கட்டிடங்களும் சேதமடைந்து காணப் படுவதாகவும் அவற்றினையும் புனரமைப் புச் செய்து தருமாறு மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இவற்றுடன் கழிவுநீர் வடிகால்கள் சீர்செய்யப்படாது காணப்படுவதாகவும் பொது மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இவை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கும் போது -

பாரதி பாலர் பாடசாலையினைக் கற்றல் நடவடிக்கைக்கு ஏற்ப புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், ஏனைய பாரிய கட்டடப் புனரமைப்புப் பணிகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவற்றினைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து சேதமடைந்த கட்டடங்களையும் கழிவுநீர் வாய்க்கால்கள் சுத்திகரிக்கப்படாது காணப்படுவதையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது யாழ் மாநகர சபை உறுப்பினர் விஜயகாந், திருநகர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் உட்பட பொதுமக்கள் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (100)

# தமிழ், முஸ்லிம் மக்களின் உறவுகள் மீண்டும் உறுதிப்படுத்தப்படவேண்டும்

## வைத்திய கலாநிதி அப்துல் ரவூப் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுகள் மீண்டும் உறுதிப்படுத்தப்படவேண்டும். கடந்த கால கசப்பான நினைவுகளிலிருந்து நீங்கி, முன்னர் போல் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என குவைத் அல பஷர் பவுண்டேஷன் அமைப்பின் பிரதிநிதி வைத்திய கலாநிதி அப்துல் ரவூப் கூறினார்.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் வணிகர் கழகத்தின் அனுசரணையில் இலங்கை முஸ்லிம் வாலிபர் ஒன்றியம், யாழ் மஸ்ஜித் முஹமதியா தலைவர் எம்.ஏ.ஸி.மூபீன் ஆகியோரின் ஒத்துழைப்புடன் கண் வெள்ளைபடலுக் கான சத்திரசிகிச்சைக்கான கண் பரிசோதனை முகாம் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

வருடம்தோறும் 1000 கண் வெள்ளைபடல் சத்திர சிகிச்சைகள் நடைபெறுகின்றன. இதுவரை 10,000 இற்கும் மேற்பட்டவர்க ளுக்குச் சேவையாற்றியுள்ளோம். இச்சத்திர சிகிச்சையை மேற்கொள்ள ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா செலவாகும். இதனை இலவசமாக 10 வருடமாக நிறைவேற்றி வருகின்றோம். இன்று யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மக்களுக்கும் இச்சேவை கிடைக்கவேண்டும் என்ற நோக்கோடு வருகை தந்துள்ளோம் எனவும் கூறினார். (19)

## மழையின் தாக்கத்தால் புகையிலைச் செய்கை பாதிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் புகையிலைச் செய்கையாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புகையிலை அறுவடை செய்து உலரவிடும் காலப பகுதியில் இம் மழை பெய்வதால் புகையிலை அழிவடைவதாகப் புகையிலைச் செய்கையாளர் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்தமுறை பெய்த மழையால் வெங்காயச் செயகை பாதிக்கப்பட்டது. தற்போது பெய்து வரும் மழையால் புகையிலைச் செய்கை முற்றாகப் பாதிக்கப்படும் அபாயம் நிலவுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (100)

# இராசாவின் தோட்டப் பகுதியில் இரு குழுக்களிடையே மோதல்

## வீதிப் பயணிகள் அசௌகரியம்

(தொல்புரம்)

கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் ஈஸ்ரர் பண்டிகைத் தினமான நேற்றையதினம் யாழ். இராசாவின் தோட்டப்பகுதியில் இளைஞர்கள் கோஷ்டி மோதலில் ஈடுபட்டதால் வீதியால் பயணம் மேற்கொண்ட பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் மதியம் மதுபோதையில் நின்ற இளை ஞர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது. இதனால் ஒரு குழுவினரை மற்றைய குழுவினர் கத்திகள் மற்றும் பொல்லுகள் சகிதம் வீதியால் இரத்தம் சொட்டச் சொட்டத் துரத்திச் சென்றனர்.

இச்சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பொது மக்கள் சிறிது நேரம் வீதியால் பயணம் மேற்கொள்வதில் இடையூறுகளைச் சந்திக்க நேரிட்டது.

இராசாவின் தோட்டப் பகுதி யிலுள்ள தேவாலயங்களில் தமது வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்றிருந்தோரும் இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இச்சம்பவத்தை அறிந்த பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து மோதலில் ஈடுபட்ட குழுவினரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். அங்கு நின்ற மோட்டார் சைக்கிள்களை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இராசாவின் தோட்டப் பகுதியில் தேவாலயங்களுக்கு அருகில் மதுபான விற்பனை நிலையம் ஒன்று இருப்பதும், இந் நிலையத்திற்குச் செல்லும் வாடிக்கையாளர்கள் பல தடவை பொது மக்களின் வீதிப பயணத்திற்கு இடையூறாக இருப்பது குறித்தும் பொது மக்கள் சுட்டிக் காட்டியுள்ளதுடன், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இது விடயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (26)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(26.04.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

சித்திரை 13 ஆம் நாள்.

இராகுகாலம் 2.59–4.29, சுபநேரம் 10.29 –11.59, நட்சத்திரம் திருவோணம் பி.ப 12.56 வரை, திதி: நவமி பி.இ 2.21 வரைக்கும்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– நல்ல செய்தி, பண வரவு, வீண் செலவு.

ரிஷபம்:– மனச் சஞ்சலம், வேண்டாத நிகழ்வு, பணச் செலவு.

மிதுனம் :– பண வரவு, நல்ல செய்தி, அதிக செலவு.

கடகம்:– நல்ல செய்தி, வீண் அலைச்சல், காரிய அனுகூலம்.

சிம்மம்:– வேண்டாத நிகழ்வு, பணச் செலவு, வீணான பயம்.

கன்னி :– காரியத் தடை, பண வரவு, நல்ல செய்தி.

துலாம் :– பண வரவு, நல்ல செய்தி, காரிய சித்தி.

விருச்சிகம்:– அதிக செலவு, பணச் செலவு, வீண் பயம்.

தனுசு:– காரிய அனுகூலம், நல்ல செய்தி, பண வரவு.

மகரம்:– காரியத்தடை, பண வரவு, அதிக செலவு.

கும்பம் :– நல்ல செய்தி, பணச் செலவு, வீண் அலைச்சல்.

மீனம்:– அதிக செலவு, வீண் பயம், காரியத்தடை.



வாழ்வாதார உபகரணங்கள் பயனாளிகளுக்கு வழங்கும் வைபவத்தில் கரவெட்டி சமுர்த்தி வங்கி உதவியாளர் உரையாற்றுவதையும், சமுர்த்திப் பயனாளி ஒருவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை வழங்குவதையும், பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் பெண் பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்குவதையும் காணலாம். (18)

### ஐ.நாவின் இலங்கைப்பிரதிநிதி சவேந்திர சில்வாவினால்

# நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக ராஜதந்திர ரீதியிலான எதிர்ப்பிரசாரம்

(கொழும்பு)

**நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக இராஜதந்திர ரீதியிலான எதிர்ப்பிரசாரத்தை ஐ.நா. வுக்கான இலங்கையின் துணைப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆரம்பித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபையில் கடமையாற்றும் அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையின் போலித் தன்மை மற்றும் அதன் சாட்சியமற்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவர் விளக்கமளிக்கவுள்ளதாக திவயின நாளிதழ் தெரிவித்துள்ளது.

புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்த பின், அரசியல் ரீதியாக சவேந்திர சில்வா சர்வதேச சமூகத்தின் முன் மேற்கொள்ளும் முதலாவது நடவடிக்கை இதுவாகும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

வன்னி யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தின் சோசர் எனப்படும் உளவு விமானத்தில் இருந்து படம் பிடிக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் ஒளிக்காட்சிகளையும் அவர் தன் தரப்புச் சாட்சியங்களாகச் சமர்ப்பிக்கவுள்ளார்.

அதற்கு மேலாக பல்வேறு கட்டங்களில் பொதுமக்கள் வழங்கிய சாட்சியங்களின் பிரதிநிதிகளையும் அவர் தன் தரப்பு பிரசாரத்துக்குப் பயன்படுத்தவுள்ளார்.

வன்னி யுத்தத்தில் மருத்துவமனைகள் மற்றும் பொதுமக்கள் நிலைகள் மீது இராணுவம் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாக முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் பொய்யானது என்பதை நிரூபிக்கும் வகையில் அன்றைய கட்டத்தில் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சிலர் யுத்தப் பிரதேசங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், புலிகள் இறுதிக்கட்ட யுத்தத்தின் கடைசி நாட்களில் நடந்து கொண்ட முறை குறித்தும், அவர்களின் செயற்பாடுகள் குறித்தும் ஆளில்லா உளவு விமானங்கள் மூலம் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் மற்றும் புகைப்படங்கள் என்பவற்றையும் அவர் ஐ.நா. சபையில் இணைந்துள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கிக் காண்பிக்கவுள்ளதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆலோசனை நடத்த எதிர்க்கட்சித் தலைவருக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கை தொடர்பாக அவசர ஆலோசனை நடத்த வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் வியாழக்கிழமையே கொழும்பு திரும்பவுள்ளார்.

இந்தநிலையில் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க, மகிந்த ராஜபக்ஷ விரும்புவதாக ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாடு திரும்பிய பின்னர் ரணில் விக்கிரமசிங்க, தனியாகச் சென்று மகிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பாரா அல்லது ஐ.தே.க குழுவொன்றுடன் சென்று சந்திப்பாரா என்பது இன்னமும் உறுதியாகவில்லை.

எதிர்க்கட்சித் தலைவருடன் இணைந்து ஐ.நாவுக்குப் பதிலளிக்கும் வகையிலான கூட்டறிக்கை ஒன்றை வெளியிடவே ஜனாதிபதி விருப்பம் கொண்டுள்ளதாக ஆளும்கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# ஐ.நா.நிபுணர் குழுவின் பின்னணியில் அமெரிக்காவும்,பிரிட்டனுமே உள்ளன

### அரசு நம்புவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் கூறுகிறது

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு எதிரான ஐ.நா நிபுணர்குழு அறிக்கையின் பின்னணியில் அமெரிக்காவும், பிரித்தானியாவுமே இருப்பதாக இலங்கை அரசாங்கம் உறுதியாக நம்புவதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அனைத்துலக போர்க்குற்ற விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கும் உலகத் தமிழர் பேரவையுடன் இணைந்து பிரித்தானியாவும், அமெரிக்காவும் இந்தக் கேவலமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த நாளேடு குறிப்பிட்டுள்ளது.

உலகத் தமிழர் பேரவை, சில பிரித்தானிய, அமெரிக்க அரசியல் அமைப்புகளுடன் இணைந்து அனைத்துலக போர்க்குற்ற விசாரணைக்கு அழைப்பு விடுத்து வருவதாகவும் கொழும்பு ஆங்கில நாளேடு கூறியுள்ளது.

நோர்வேயின் முன்னாள் நடுநிலையாளர் எரிக் சொல்ஹெய்ம் கூட அமெரிக்க, பிரித்தானிய அரசுகளின் இந்த நகர்வுகளுக்கு பின்புலத்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள அந்த நாளேடு,அவரும் அனைத்துலக போர்க்குற்ற விசாரணைக்கு பகிரங்கமான முறையில் அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 28ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உதவிச் செயலர் றொபேட் ஓ பிளேக்கைச் சந்தித்த உலகத் தமிழர் பேரவையினருக்கு ஐ.நா பொதுச்செயலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் கூறியுள்ள கொழும்பு நாளேடு, இந்தச் சந்திப்பு அமெரிக்கத் தலையீடு இல்லாமல் ஒருபோதும் சாத்தியமில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் மே முதலாம் திகதி கொழும்பில் நடத்தப்படவுள்ள பாரிய பேரணியில் அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவுக்கு எதிரான எந்த முழக்கங்களையும் எழுப்புவதில்லை என்று இலங்கை அரசாங்கம் கண்டிப்பான முடிவை எடுத்துள்ளதாகவும், இந்தப் பேரணியில் ஐ.நா பொதுச் செயலரும், மர்சுகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழுவுமே இலக்காக இருக்கும் என்றும் அந்த நாளேடு தகவல் வெளியிட்டுள்ளது.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும்

### பிரதமநீதியரசர் அசோக டி சில்வா வலியுறுத்து



(கொழும்பு)

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமென பிரதம நீதியரசர் அசோக டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

இன்னும் இரண்டு மாத காலத்தின் பின் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள அவர் பி.பி.சி. சந்தேசய சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியின் போதே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையின் அதிகாரங்களைக் குறைப்பதற்கான முயற்சிகள் தோல்வியுற்றமைக்கு எதிர்க்கட்சியே பொறுப்பேற்க வேண்டும். எதிர்க்கட்சிகளின் தவறினால் தான் அதற்கான வாய்ப்புகள் இழக்கப்பட்டன.

17ஆவது அரசியல் திருத்தச் சட்டம் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கும், சுயாதீன ஆணைக் குழுக்களை அமைப்பதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆயினும் அவசர கதியில் நிறைவேற்றப்பட்ட 18ஆவது திருத்தச் சட்டம் அதற்கான அவகாசங்களை இல்லாதொழித்து விட்டது.

18ஆவது திருத்தச் சட்ட மூலம் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் காணப்படுவது போன்று நீதிச்சேவையின் பிரதான பதவிகளுக்குப் பொருத்த மானவர்களை நியமித்தல் போன்ற அதிகாரங்கள் மீண்டும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அதற்குப் பதிலாக 17ஆவது திருத்தச சட்டத்தின் பரிந்துரைகள் அமுல்படுத்தப் படுவதே சிறப்பானதாக இருக்கும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# சாட்சியங்களை ஆய்வு செய்யும்போது தெளிவுபடுத்தல்கள் பெறப்படும்

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு பெற்றுக்கொண்டுள்ள சாட்சியங்களை ஆய்வு செய்யும்போது தேவைப்படின் ஏற்கனவே சாட்சியமளித்தவர்கள் வரவழைக்கப்பட்டு தெளிவுபடுத்தல்கள் பெறப்படும் என்று ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழு பெற்றுக் கொண்டுள்ள சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணிகள் தற்போது இடம் பெற்றுவருகின்ற அதேவேளை, ஆணைக்குழுவின் இறுதிப் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையின் முதற்கட்ட வரைபும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சாட்சியங்களை ஆய்வு செய்யும்போது முக்கியமான யோசனைகளில் ஏதாவது மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் குறிப்பிட்ட சாட்சியங்களை வழங்கியவர்கள் மீண்டும் அழைக்கப்பட்டு தெளிவுபடுத்தல்களை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்று ஆணைக் குழுவின் அதிகாரி குறிப்பிட்டார்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு கொழும்பு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் தனது விசாரணை அமர்வுகளை நடத்தியிருந்தது. வடக்கு கிழக்கிலும் விசாரணை அமர்வுகள் நடைபெற்றிருந்தன.

இந்நிலையில் எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதிப் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை வெளியிடப்படும்.



என்று தெரிவிக்கப்பட்டுவருகின்றது.

ஏற்கனவே ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்தப் பரிந்துரைகள் தொடர்பில் ஆராய அரசாங்கம் ஆலோசனைக் குழு ஒன்றையும் நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை

## அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு


(கொழும்பு)

ஐபிஎல் போட்டிகளில் இலங்கை அணி வீரர்கள் விளை யாடுவதற்குத் தன்னால் பத்து வருட ஒப்பந்த காலம் செய்யப்பட்டுள்ளதென வெளியான செய்திகளை முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் காமினி லொக்குகே மறுத்துள்ளார்.

தற்போது விளையாட்டுத் துறை அமைச்சராக உள்ள மகிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு குற்றம்சாட்டியிருந்தார்.

ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றியுள்ள இலங்கை வீரர்கள் எதிர்வரும் மே மாதம் 26ஆம் திகதி தொடங்கவுள்ள இங்கிலாந்துடனான தொடரில் பங்கேற்கும் வகையில் எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன் நாடு திரும்ப வேண்டுமென அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே உத்தரவிட்டிருந்தார்.

எனினும், பின்னர் தனது முடிவை மாற்றிக்கொண்ட அமைச்சர், முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த காமினி லொக்குகே, ஐ.பி.எல். உடன் பத்து வருட ஒப்பந்தமொன்று செய்யப்பட்டுள்ளதெனவும், இதனை இந்திய கிரிக்கெட் சபை எமக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.



எனினும் அமைச்சர் மகிந்தானந்தாவின் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அமைச்சர் லொக்குகே, கடந்த 2007ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நான் அமைச்சராக இருந்தபோது இவ்வாறு எது வித ஒப்பந்தமும் செய்யப்படவில்லை. அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயிற்கு இது தொடர்பாக தவறான தகவல் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் ஐ.பி.எல்.இல் விளையாட வீரர்களுக்கு அனுமதியை வழங்கியிருந்தேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐந்தாவது தடவையாகவும் கிண்ணத்தை வென்றார் நடால்



ஸ்பெயின் ரென்னிஸ் வெற்றிக் கிண்ணத்தை ரபேல் நடால் கைப்பற்றிக் கொண்டார். ஸ்பெயின் நாட்டில் உள்ள பார்சிலோனா நகரில் ரென்னிஸ் போட்டித் தொடர் நடைபெற்றது. இதில் ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) சகநாட்டு வீரர் டேவிட் பெடரரை எதிர் கொண்டார்.

இதில் ரபேல் நடால் 6-2,6-4 என்ற நேர் செட்டில் வென்று சம்பியன் பட்டத்தைப் பெற்றார். களிமண் மைதானத்தில் திறமையாக ஆடும் வீரரான ரபேல் நடால் களிமண் மைதானத்தில் 34 போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்று இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றது மிகவும் மகிழ்ச்சியளிக்கும், அதேவேளை, டேவிட் பெரரர் என்னுடன் விளையாடிய மூன்று முறையும் தோல்வியடைந்தது அவருக்கு துரதிஸ்டமாகவே அமைந்துவிட்டது. இவ்வெற்றியின் மூலம் அடுத்து வரும் தொடர்களிலும் சிறப்பாகச் செயற்பட்டு முதல் நிலையைத் தக்கவைப்பேன் என நடால் தெரிவித்திருந்தார்.

# சாதனை முறியடிப்பு

(நியூயோர்க்)

இலங்கையைச் சேர்ந்த தடை தாண்டல் ஓட்ட வீராங்கனையான சொனாலி மெரில், இலங்கையின் தேசிய சாதனையொன்றை அமெரிக்காவில் முறியடித்துள்ளார்.

அமெரிக்காவில் கல்வி பயிலும் சொனாலி மெரில், அண்மையில் கலிபோர்னியாவில் நடைபெற்ற மௌண்ட் சாக் சம்பியன்சிப் போட்டியில் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் 58.84 விநாடிகளில் ஓடி முடித்து புதிய சாதனை படைத்தார்.

இது 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் இலங்கை வீராங்கனை ஒருவரின் புதிய சாதனையாகும்.

எனினும் மேற்படி போட்டியில் சொனாலி ஐந்தாவது இடத்தையே பெற்றார். கிறிஸ்டைன் ஸ்பென்ஸர் 56.85 விநாடிகளில் ஓடி முடித்து முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சொனாலி மெரில், எதிர்வரும் காலங்களில் சர்வதேச போட்டிகளில் சாதனையை ஏற்படுத்தக்கூடிய வீரராக வலம் வர விரும்புகின்றேன் என்றார்.





# கல்மாடி நேற்று கைது செய்யப்பட்டார்



ஊழல் புகாரில் சிக்கிய கொமன்வெல்த் போட்டி ஒருங்கிணைப்புக்குழு முன்னாள் தலைவரும், காங்கிரஸ் எம்.பி.யுமான சுரேஷ் கல்மாடியை சி.பி.ஐ. நேற்று கைது செய்தது. கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் கடந்த அக்டோபர் மாதம் டில்லியில் நடைபெற்றது. லண்டனில் நடைபெற்ற கொமன்வெல்த் ஜோதி தொடக்க விழாவில் ஆரம்பித்து, போட்டிக்கான கருவிகள் வாங்கியது மற்றும் மைதானங்கள் தயார் செய்தது என பல வழிகளில் பல ஆயிரம் கோடி ரூபா அளவுக்கு ஊழல் நடைபெற்றிருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதுதவிர போட்டியை ஒளிபரப்பும் உரிமையை தனியார் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் செய்த வகையிலும் கோடிக் கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக கூறப்பட்டது. இதையடுத்து மேற் கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்தே நேற்றைய தினம் அவர் கைது செய்யப்பட்டார்.

# சச்சினும் அஞ்சலி



(புட்டபர்த்தி)

சாயிபாபாவின் உடல் அருகே அமர்ந்து சச்சின் டெண்டுல்கர் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினார்.

சாயி பாபாவின் மறைவைத் தொடர்ந்து சச்சின் தங்கியுள்ள அறைக்கதவில் யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம் என அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டது. அப்போதிலிருந்தே அவர் தனது அணி வீரர்களைக் கூட சந்திக்கவில்லை என்றும் அவர் கூறினார். மும்பை அணியின் உரிமை யாளர் டினா அம்பானி மட்டுமே சச்சினைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

சாயிபாபாவின் உடலைத் தரிசிக்க, இலட்சக்கணக்கான பக்தர்கள் பிரசாந்தி நிலையத்தில் குவிந்து வருகின்றனர். இந்நிலையில் அவரது தீவிர பக்தரான சச்சின் டெண்டுல்கர், மனைவியுடன் புட்டபர்த்தி வந்தார். சாயிபாபாவின் உடல் அருகே அமர்ந்து கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினார்.

# தொடரைக் கைப்பற்றுவோம்



(சென்லூசியா)

மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான ஒரு நாள் தொடரைக் கைப்பற்றுவோம் என மொகமட் ஹபீஸ் தெரிவித்தார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது போட்டியில் ஆட்டநாயகன் விருதைப் பெற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: நாங்கள் நல்ல நிலையில் இருக்கின்றோம். எங்களுக்கு இத்தொடரை வெல்வதற்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றது. துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என அனைத்து வகையிலும் நாங்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றோம். எதிர்பாராதவிதமாக ரி-20 போட்டியில் தோல்வியடைந்துவிட்டோம்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியும் சிறப்பாகவே ஆடி வருகின்றது. அந்த அணியின் அனுபவ வீரர்கள் இத்தொடரில் விளையாடாதபோதிலும், இளம் வீரர்கள் சிறப்பாக ஆட முயற்சி செய்து வருவது பாராட்டத்தக்கது. தொடர்ந்தும் சிறப்பான பங்களிப்பை அணிக்கு வழங்கி, வெற்றிக்குத் துணை புரிவேன் என்றார்.

# மோகனதாஸ் அணி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணி சம்பியனாகத் தெரிவானது.

வரணி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இந்த இறுதிப் போட்டி நடைபெற்றுது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் 18 அணிகள் பங்கு கொண்டன.

இதன் இறுதிப் போட்டிக்கு கைதடி வளர்மதி அணியும், மட்டுவில் மோகனதாஸ் அணியும் தெரிவாகின.

மூன்று செட்களைக் கொண்ட இந்த இறுதிப் போட்டியில் மிகச் சிறப்பாக ஆடிய மோகனதாஸ் அணி, 25-19, 25- 18 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவானது.

# புத்தாண்டை முன்னிட்டு சைக்கிள் ஓட்டம்




(தெல்லிப்பளை)

தமிழ் - சிங்களப் புதுவருடத்தை முன்னிட்டு குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் படையினர், பொலிஸார் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றனர். அந்த வகையில், தெல்லிப்பளை பிரதேச செயலகமும் தெல்லிப்பளைப் பொலிஸாரும் இணைந்து நடத்திய விளையாட்டுப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

38 கிலோமீற்றர் தூரத்திற்கான சைக்கிளோட்டப் போட்டியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வீரர்கள் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கலந்துகொண்டனர்.

போட்டியில் முதலாம் இடத்தை எட்மன் - வட்டுக்கோட்டை, இரண்டாம் இடத்தை குயின்ரன் கொக்குவில், மூன்றாம் இடத்தை ராஜன், பண்டத்தரிப்பு ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.



# குறள் சொல்லும் கதைகள் -38

## இன்பத்துப் பால்

## ஒளி முகம்

அர்ச்சகா வெகு நேரமாகக் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். அர்ச்சகாவுடன் எவ்வளவோ கதைக்க வேண்டும் என்று பல நாட்களாகத் திட்டமிட்டிருந்த நகுலன் எதுவும் பேசத் தோன்றாமல் கடலைப் பார்த்துக் கொண்டிருக்கும் அர்ச்சகாவைப் பார்த்துக் கொண்டிருந்தான். முன்பு பார்த்ததை விட அர்ச்சகா மிகவும் அழகாக இருந்தாள். முழுப்பாவாடையும் சட்டையும் அணிந்திருந்தாள். சிவந்த நிறத்திற்கு அவள் அணிந்திருந்த மஞ்சள் பாவாடை சட்டை எடுப்பாக இருந்தது. மெல்லிய நீண்ட கால் விரல்கள், கணைக் காலுக்குச் சற்று மேலே தெரிந்த அவளது கால் பகுதியின் பூரிப்பு அவனை கிறுகிறுக்க வைத்தது. செழுமையான காலில் லேசாக அரும்பியிருந்த பூனை மயிர்கள் மனத்திற்குக் கிளர்ச்சியைக் கொடுத்தன.

குறும்புத் தனம் கொண்ட அழகான முகம் செக்கச் செவேலெனச் சிவந்திருந்தது. அழகான சிவந்த உதடுகள், அளவான மூக்கு, அதில் மின்னும் மூக்குத்தி பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றும். அளவான உருவ அமைப்பு. அவனால் பேச முடியவில்லை.

வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சந்திரனைச் சில கணங்கள் பார்த்தான். அழகான பெண்களின் முகத்திற்கு வர்ணிக்கப்படும் சந்திரன் இவளின் முகத்திற்கு இணையாக மாட்டான் போலத் தோன்றியது. தமிழ் விரிவுரையாளர்கள் கவிதைகளைக் கற்பிக்கும் போது நிலவைப் புகழ்வார்கள். ஆனால் அவர்கள் அர்ச்சகாவின் முகத்தைப் பார்த்திருந்தால் அப்படிப் புகழமாட்டார்கள் என்று நினைத்தவாறு நிலவைப் பார்த்தான். நிலவே! இதுநாள் வரை நீ தான் குளிர்மையான ஒளி வீசும் தன்மையை உடையவள் எனக் கேள்விப்பட்டேன். இப்பொழுது நீ அர்ச்சகாவைப்பார். அவளின் முகத்தில் வீசும் ஒளியை விட உனது முகத்தில் கூடுதலான ஒளியா உள்ளது. இவளைவிட நீ அழகுளளவளானால் அவளை விட்டு விட்டு உன்னைத்தான் நான் விரும்புவேன் என நினைத்தான் நகுலன்.

"நான் போக வேண்டும்" மெல்லச் சொன்னாள் அர்ச்சகா. நகுலன் அவளது அழகான உதடுகளைப் பார்த்தான். வர்ணம் பூசப்பட்ட அவளது உதடுகள் மெதுவாகத் துடித்து எதையோ சொல்வதைப் போலிருந்தது.

"நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்" மெதுவாகக் கேட்டான் நகுலன். "க.பொ.த உயர்தரம் வரை படித்துவிட்டு வேலை தேடுகிறேன். நீர் வேலை தேடத் தேவையில்லை. நான் உழைத்து உம்மை மகாராணி போல வைத்திருப்பேன்". அர்ச்சகாவின் பற்கள் ஒளிர்ந்தன. உதடுகள் நளினமாக அசைந்தன.

உம்மைக் கண்ட அன்றே உமது அழகில் மயங்கிவிட்டேன். புலவர்கள் பெண்களை எப்படியெல்லாம் வர்ணித்திருக்கிறார்கள். உமது அழகு அவர்களின் வர்ணனைகளைவிட வேறுபட்டு இருக்கிறது.

அர்ச்சகா மெதுவாகச் சிணுங்கினாள். அவளது முகம் சிவக்க தலை கவிழ்ந்தது. நீர் என்னை விரும்புவீரோ என்று இவ்வளவு நாளும் பயந்து போனேன். நீர் என்னைச் சந்திக்க வருவீர் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. இன்று நல்ல நாள். மிகவும் அதிஷ்டமான நாள். என் வாழ்வில் பொன்னான நாள் இது."

"ஆண்கள் காதலிக்கும்போது பிதற்றுவார்கள் என்று சொல்லக் கேட்டுள்ளேன். அது உண்மைதான்". சிரித்தாள் அர்ச்சகா.

அவளின் சிரிப்பு நகுலனுக்குப் போதையைக் கொடுத்தது. "இன்று முதல் முதலாகச் சந்திக்கிறோம். எம்மைப் பற்றியும் எமது குடும்ப நிலை பற்றியும் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். நான் ஒரே ஒரு பிள்ளை. அப்பா பொறியியலாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டார்" என்றாள் அர்ச்சகா.

"எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அப்பாவும் அம்மாவும் ஆசிரியர்கள். இன்னும் ஓய்வு பெறவில்லை" என்றான் நகுலன். அப்பொழுது கஜேந்திரனும் அங்கு வந்தான்.

"அர்ச்சகா உம்முடைய அம்மா எங்களைத் தேடிக் கோயிலுக்குப் போய்விடுவா. வாரும் போவம்" என்றான். அர்ச்சகா ஏக்கத்துடன் நகுலனைப் பார்த்தாள். வசதியான நேரம் சந்திப்போம். வித்தியாவிடம் சொல்லி அனுப்புகிறேன் என்றாள் அர்ச்சகா.

**கே.வி.குணசேகரம்**

மாதர் முகம் போல் - ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. - குறள் - 1118

நிலவே! நான் விரும்பும் பெண்ணின் முகத்தைப் போல ஒளி வீச உன்னால் முடியுமானால், நீயும் என் காதலை அடைவாய்.

# லிபிய ஜனாதிபதி மாளிகை மீது நேட்டோ விமானங்கள் தாக்குதல்

(திரிபோலி)

திரிபோலியில் லிபிய தலைவர் முகம்மர் கடாபியின் அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தை நேற்றுக் காலை போர் விமானங்கள் குண்டுவீசி சேதப்படுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இந்தக் குண்டுவீச்சில் பொது மக்களில் 45 பேர் காயமடைந்ததாகவும், 15 பேர் கவலைக்கிடமாக உள்ளதாகவும் லிபிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் கட்டட இடிபாடுகளில் யாராவது சிக்கி உள்ளார்களா என்பது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றார் அவர்.

கடாபியைக் கொல்ல நடந்த முயற்சி இது என அவர் உறுதியாகக் கூறினார்.


இந்தக் குண்டு வீச்சில் கடாபியின் அலுவலகத்திலுள்ள வரவேற்பறை பலத்த சேதமடைந்தது.

லிபிய ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பொப் அல்-அஸிஸியா மாவட்டத்தில் நேட்டோ போர் விமானங்கள் ஏற்கனவே கடந்த வெள்ளிக்கிழமை குண்டு வீசித் தாக்குதல் நடத்தின.



நேற்று அதிகாலை போர் விமானங்களின் குண்டுவீச்சால் திரிபோலியின் மத்தியப் பகுதியில் கடும் அதிர்வு ஏற்பட்டது. திரிபோலியின் பல்வேறு மாவட்டங்களில் நள்ளிரவு 12.10 மணியளவில் குண்டுகள் வீசப்பட்டதாகத தகவல்கள் குறிப்பிடுகின்றன.

# அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கில் ஏற்பட்டது சரிவு



(வொஷிங்டன்)

அமெரிக்காவில் அடுத்த வருட (2012) இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தலில் ஜனாதிபதி ஒபாமா போட்டியிடவுள்ளார்.

இந்த நிலையில், அவரது செல்வாக்குக் குறித்து நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையும், சி.பி.எஸ். செய்தி தொலைக் காட்சியும் இணைந்து சமீபத்தில் தொலைபேசி மூலம் பொதுமக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தின.

கடந்த 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நாடு முழுவதும் கணனி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 1224 பேரிடம் கருத்துகள் கேட்கப்பட்டன.

அதில், ஜனாதிபதி ஒபாமாவின் செயற்பாடு குறித்து 45 சதவீதம் பேர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இது கடந்த ஜனவரி மாதத்தைவிடக் குறைவாகும்.

மேலும், பொருளாதார நெருககடியை அவர் கையாள்வது குறித்து 57 சதவீதம் பேரும், வரவு-செலவுப் பற்றாக்குறையை அவர் கையாண்டது குறித்து அதே அளவு பேரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மேலும் நாடாளுமன்றத்தின் செயறபாடு குறித்து 75 சத வீதம் பேர் அதிருப்தி எனக் கருத்து கூறியுள்ளனர். இவற்றையெல்லாம் பார்க்கும்போது அமெரிக்க மக்கள் மத்தியில் ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்குச் சரிந்துள்ளது எனக் கருதப்படுகிறது.

ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர்களுக்கு, அதிகமாக வருமானம் ஈட்டுவோருக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த வரிவிலக்கை இரத்துச் செய்யும் ஒபாமாவின் திட்டத்துக்கு 72 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

லிபியா மீதான தாக்குதலுக்குப் பெரும்பாலானோர் எதிரப்புத் தெரிவித்துள்ளனர். நாடு தவறான பாதையில் சென்று கொண்டிருப்பதாக 70 சதவீதம் பேர் கருத்துக் கூறியுள்ளனர்.

# இந்தோனேசியாவில் நிலநடுக்கம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் நேற்று அதிகாலை கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 6.2 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவானது. இதனால் பீதியடைந்த பொதுமக்கள் தங்கள் வீடுகளில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு விரைந்தனர்.

சில ஹோட்டல்களின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தன. சுவர்களில் விரிசல் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் யாருக்கும் காயம ஏற்பட்டதா என்பது குறித்து உடனடித் தகவல் ஏதும் இல்லை.

சுலாவேசி தீவில் உள்ள கேந்தரி நகருக்குத் தென்கிழக்கே 9 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவிஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தினைத் தொடர்ந்து 3 முறை கடுமையான நில அதிர்வுகளும் ஏற்பட்டன.

# பூகம்பத்தில் பலியானோர் உடல்களை மீட்க 25 ஆயிரம் ஜப்பானியப் படையினர் களத்தில்

(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த மாதம் 11ஆம் திகதி பூகம்பமும், அதைத் தொடர்ந்து சுனாமியும் ஏற்பட்டது. இதில், கட்டடங்கள், மற்றும் வீடுகள் இடிந்து சேதமடைந்தன. இதில் 14,300 பேர் பலியானதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் 12 ஆயிரம் பேரைக் காணவில்லை. எனவே, அவர்களும் பூகம்பத்தில் பலியானதாகக் கருதப்படுகிறது. ஆகவே அவர்களின் உடல்களை மீட்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

இதற்காக 25 ஆயிரம் இராணுவ வீரர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் இடிபாடுகளை அகற்றி அதில் உடல்கள் சிக்கிக் கிடக்கின்றனவா? எனத் தேடி வருகின்றனர். இதற்காக 90 ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டன. சுனாமியால் சிக்கிப் பலியானவர்கள் உடல்கள் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எனவே 50 படகுகள் மூலம் கடலுக்குள் 20 கி.மீற்றர் தொலைவில் சென்று உடல்களைத் தேடி வருகின்றனர்.

இப்பணியில் ஜப்பான் இராணுவ வீரர்களுடன் பொலிசார், கடற்பாதுகாப்புப் படையினர் மற்றும் அமெரிக்கப் படையினரும் ஈடுபட்டுள்ளனர். இந்தத் தேடுதல் பணி தங்களுக்கு மிகவும் சவாலானதாக உள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இப்போ மேயமா தெரிவித்துள்ளார்.

மனிதர்களைத் தவிர பூகம்பம் மற்றும் சுனாமியில் பலியான



ஆடு, மாடு, பன்றிகள், கோழிகள் போன்றவற்றின் உடல்களைத் தேடும் பணியில் வேளாண் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

# 500 கைதிகள் தப்பியோட்டம்



ஆப்கானிஸ்தான் சிறையில் இருந்து 500 கைதிகள் தப்பியோடினர். தெற்கு ஆப்கானிஸ் தான் கந்தஹார் சிறையில் ஏராளமான தலிபான் பயங்கரவாதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். சிறையில் இருந்து பல மீற்றர் தூரத்துக்குச் சுரங்கம் தோண்டியே அங்கிருந்து தப்பியுள்ளனர். தப்பியோடியவர்களில் 106 பேர் தலிபான் கொமாண்டர்கள், எஞ்சியுள்ளவர்கள் தலிபான் படையினர் ஆவர் என சிறைச்சாலை அதிகாரி தெரிவித்தார். கடந்த 2008ஆம் ஆண்டு 1000 கைதிகள் ஆப்கான் சிறையில் இருந்து தப்பியோடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத் தமிழரின் அவலநிலைக்கு கருணாநிதியே முழுமுதற் காரணம்

## விஜயகாந் குற்றச்சாட்டு



(சென்னை)

இலங்கையில் தமிழர்களின் அவல நிலைக்குத் தமிழக முதல்வர் கருணாநிதியே முழு முதல்காரணம் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர்வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

புலி இயக்கத்தை ஒடுக்கப் போவதாகக் கூறி இந்திய அரசின் துணையோடு இலங்கை அரசு இறுதிக் கட்டத்தில் போரை நடத்தியது.

இதைக் கண்டித்து உலகமெங்கும் உள்ள தமிழர்கள் கண டன ஊர்வலம் நடத்தினர். தமிழக முதல்வர் கருணாநிதி இந்தப் போரைத் தடுத்து நிறுத்துவார் என்று உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் 1991இல் ஆட்சியை இழந்ததாகவும், இப்பொழுது 3 ஆவது முறையாக, தான் ஆட்சியை இழந்தால் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்று எண்ணியிருக்கின்றேனோ அவற்றை எல்லாம் செய்து முடிக்காமலேயே ஆட்சி கவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார் கருணாநிதி.

இதற்கிடையில் காலை உணவுக்குப் பிறகு சென்னை மெரினா கடற்கரையில் மதிய உணவுக்கு முன்வரை கருணாநிதி உண்ணாவிரதம் இருந்தார். அப்போது மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம், இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டது என்று கூறியதாகத் தெரிவித்துவிட்டு உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

போரும் ஓயவில்லை, தவிர்கப்படவுமில்லை. சிதம்பரம், கருணாநிதியிடம் சொன்ன சிதம்பர ரகசியம் என்ன என்பதை கருணாநிதி வெளியிடுவாரா? என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாயிபாபா அறக்கட்டளை நிர்வாகிகள் சமூகசேவைப் பணியைத் தொடரவேண்டும்

## பாடகி சுசீலா வேண்டுகோள்

(சென்னை)

சாயிபாபாவின் தீவிர பக்தரான பாடகி சுசீலா, புட்டபர்த்தி ஆசிரமம் சென்று சாயிபாபா உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் வெளியே கண்ணீருடன் வந்த பாடகி சுசீலா கூறியதாவது:


நான் சிறுவயதில் இருந்தே சாயிபாபாவின் தீவிர பக்தை. அவரிடம் நாம் என்ன வேண்டினாலும் கிடைக்கும். அவர் உலக மக்களிடம் அன்பைப் போதித்தார். மனிதர்களிடம் உள்ள போட்டி, பொறாமை, கவலை போன்ற தீய குணங்களை ஒழிப்பது பற்றி அதிகம் போதித்தார்.

அவரது போதனைகளால் திருந்தியவர்கள் ஏராளம். அவரால் இந்தியா ஆன்மீகத்தில் அதிக வளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. உலகில் எத்தனையோ பாபாக்கள் இருக்கலாம். எத்தனையோ சாமியார்கள் தோன்றலாம். ஆனால் அவர்களை எல்லாம்விட சாயிபாபா புனிதம் நிறைந்தவர்.

ஏழைகளின் கஷ்டத்தில், துயரத்தில் பங்கு கொண்டவர். அவரைப்போல வேறு யாராலும் சமூக சேவை செய்திருக்க முடியாது. இந்த மகான் 96 வயது வரை இருப்பார் என்று மிகவும் எதிர்பார்த்தோம். ஆனால் இறைவன் பாபாவை வெகுசீக்கிரத்திலேயே எங்களிடம் இருந்து பிரித்துவிட்டார். அவர் இந்த உலகை விட்டுப் பிரிந்தாலும் அவரது சேவைகள் தொடரும். அறக்கட்டளை நிர்வாகிகள் அந்தப் பணியை திறமையாகச் செயல்படுத்த வேண்டும் என்றார்.

# எகிப்தில் புரட்சி வெடித்ததற்கும் ஊழலே முக்கிய காரணமாகும்

## அப்துல் கலாம் சொல்கிறார்



(சிக்காக்கோ)

நாட்டில் ஊழலைத் தடுக்க வேண்டும். எகிப்து நாட்டில் புரட்சி வெடித்ததற்கு இது தான் காரணம். புதுமையான கருத்துக்களை அரசியலாக்கக் கூடாது. எனஅமெரிக்காவின் சிக்காகோ நகரில் முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வறுமையை ஒழிக்கவும், சுத்தமான குடிநீர் மற்றும் எரிசக்தி கிடைக்கச் செய்யவும், தரமான கல்வி கிடைக்கவும் நல்ல உலகத்தைப் படைக்க வேண்டும். அணு சக்தி தூய சக்தி தான். எனவே, இந்தச் சக்தியை உலகம் முழுவதும் பயன்படுத்தச் செய்ய வேண்டும்.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 9 சதவீதமாக உள்ளது. இன்னும் ஓராண்டில் இது 10 சதவீதத்தை எட்டி விடும். 2020இல் இந்தியா பொருளாதாரத்தில் வல்லமை படைத்த நாடாகி விடும். நாடாளுமன்றில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு கிடைக்கச் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பதினொராவது அகவையில்

பெயர்: ஐஸ்நோவர் அபியூ

முகவரி: 17/22 ஏ, நாவலடி ஒழுங்கை வண்.வடமேற்கு, யாழ்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................


முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .................................... பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# மத்திய அரசின் வெளிப்படையான ஊழல் வெட்கக்கேடானது என்கிறார் அத்வானி



(புதுடில்லி)

2008ஆம் ஆண்டு நம்பிக்கை வாக்கெடுப்பின்போது எம்.பி.க்களுக்கு வெளிப்படையாகவே லஞ்சம் கொடுத்தது முதல் மத்திய அரசின் அனைத்து ஊழல்களும் வெட்கக்கேடானவை என பா.ஜனதா மூத்த தலைவர் அத்வானி தெரிவித்தார்.

பா.ஜனதா மூத்த தலைவர் அத்வானி, இணைய தளத்தில் தன்னுடைய பிளாக் பக்கத்தில் அவ்வப்போது அரசியல் விமர்சனக் கட்டுரையை எழுதி வருகிறார். நாடு முழுவதும் ஊழலுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்துள்ள நிலையில், சமீபத்தில் ஒரு கட்டுரையை எழுதி இருக்கிறார்.

அந்தக் கட்டுரையில் அத்வானி கூறியுள்ளதாவது:-

2004ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாட்டின் பிரதமராக மன்மோகன் சிங் இருந்து வருகிறார். 2008ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தான் மிகத் தீவிரமான கட்டத்தை அவர் எதிர்நோக்கினார். பெரும்பான்மையை இழந்ததால் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதற்காக எம்.பி.க்களை வெளிப்படையாகவே விலைக்கு வாங்கியது மிகவும் வெட்கக்கேடான செயலாகும். அப்போது, தங்களுக்கு அளித்த பணத்தை நாடாளுமன்றத்திலேயே பா.ஜனதா எம்.பி.க்கள் கொண்டு வந்து கொட்டினார்கள். இதை, "விக்கிலீக்" இணைய தளமும் தற்போது வெளியிட்டுள்ளது.

காங்கிரஸ் எம்.பி. சதீஷ் சர்மா வீட்டில் இரண்டு பெட்டி நிறைய அடுக்கி வைக்கப்பட்டிருந்த ரூ.60 கோடி பணத்தை அமெரிக்கத் தூதரக அதிகாரியை அழைதது வந்து காட்டி இருக்கின்றனர். அதை விக்கிலீக் அம்பலப் படுத்தியுள்ளது. ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் முதலாவது ஆட்சியைப் போலவே, இரண்டாவது ஆட்சியிலும் ஊழல்கள் தொடருகின்றன.

மன்மோகன் சிங் அரசின் தொடர்ச்சியான ஊழல்களும், உயர் நீதிமன்றத்தின் கிடுக்கிப் பிடி கேள்விகள் மற்றும் கண்டனங்களும் நாள் தோறும் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாகின்றன.

ஜப்பானில் உள்ள புகுஷிமா அணு உலையில் நிகழ்ந்த கதிர் வீச்சுச் சம்பவத்துக்கு பிறகும் அதில் இருந்து பாடம் படிக்க மத்திய அரசு மறுககிறது. மத்திய அரசின் செய்தித் தொடர்பாளர்கள் அனைவருமே பாதுகாப்பு அம்சங்களைப் பற்றி எதுவும் பேசுவதில்லை. மாறாக, புதிய அணுமின் உலைகள் அமைப்பது பற்றிய பாதையிலேயே செல்கின்றனர்.

மராட்டிய மாநிலம் ஜெய்தாபுரில் அணுமின் நிலையத்தை அமைப்பதில் சுற்றுச் சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் பிடிவாதம் காட்டுகிறார். ஜப்பானில் ஏதாவது சுற்றுச் சூழல் ஆர்வலர் எச்சரிக்கை விடுத்திருந்தாலும் இந்தச் சம்பவம் நிகழ்ந்து இருக்காது. பூகம்ப அபாய பகுதியில் அந்த அணுமின் நிலையம் அமைந்திருக்கிறது.

இதை எதையும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கருத்தில் கொள்ளவில்லை. அமெரிக்க அணுமின் நிறுவனங்களின் வர்த்தக நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.




# முக்கிய ஆவணங்களை அழிக்க தி.மு.க. அரசு முயற்சி செய்கிறது

## அ.தி.மு.க. புகார் அளிப்பு

(சென்னை)

புனித ஜோர்ஜ் கோட்டையில் இருந்து புதிய தலைமைச் செயலகத்துக்குக் கொண்டு செல்வதாகக் கூறி முக்கிய ஆவணங்களை தி.மு.க. அரசு அழிக்க முயற்சி செய்கிறது என்று அ.தி.முக. சார்பில் தேர்தல் ஆணையத்திடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருக்கும்போது இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட அரசுக்கு அதிகாரம் இல்லை.

எனவே, அரசு ஆவணங்களை கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லத் தேர்தல் ஆணையம் தடை விதிக்க வேண்டும் என்று அந்தப் புகாரில் கூறப்பட்டுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.வை. குரேஷி, தேர்தல் ஆணையர்கள் வி.எஸ். சம்பத், எச்.எஸ். பிரமா, தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி பிரவீண்குமார் ஆகியோருக்கு அ.தி.மு.க சார்பில் இந்தப் புகார் மனு அனுப்பப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. பொருளாளர் ஓ.பன்னீர்செல்வம், தலைமை நிலையச் செயலர் கே.ஏ.செங்கோட்டையன், வடசென்னை மாவட்ட செயலர் டி.ஜெயக்குமார் ஆகியோர் அந்தப் புகாரில் கையெழுத்திட்டுள்ளனர்.

# புலிகளை அழிக்கும் நிலையிலிருந்த இந்தியா பொதுமக்களின் இழப்பை கண்டு கொள்ளவில்லை

## முன்னாள் ஐ.நா பேச்சாளர் குற்றச்சாட்டு



புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இந்திய அரசாங்கமும் இருந்ததால், பொது மக்கள் உயிரிழப்புகளை அது கண்டு கொள்ளவில்லை என்று, முன்னர் கொழும்பில் ஐ.நா தலைமையகத்தின் பேச்சாளராக இருந்த கோர்டன் வைஸ் குற்றம்சாட்டியுள்ளார்.

பி.பி.சி சிங்கள சேவைக்கு அளித்த செவ்வியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பெரும் முற்றுகையின் போது ஓரிடத்தில் குவிந்த பொதுமக்களின் அவலங்களைப் போக்க ஐ.நா இன்னும் அதிகம் செய்திருக்க வேண்டும். ஐ.நா நிபுணர்குழு சுட்டிக்காட்டியுள்ள முக்கிய விடயங்களில் இதுவும் ஒன்று.

ஐ.நா இன்னும் பொறுப்புடன் செயற்பட்டிருக்கலாம் என்ற தொனிப்படவே நிபுணர்குழு கருத்து வெளியிட்டுள்ளது. பொதுமக்களின் உயிரிழப்புகள், ஆட்சேதங்கள் பற்றி அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான நிலைமையில் பொதுமக்களின் உயிரிழப்புப் பற்றிய புள்ளிவிபரங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

ஆனால் ஐ.நா அதனை ஏன் செய்யவில்லை என்று எழுந்துள்ள கேள்விக்கு, இறுதிக்கட்டப் போர்க்காலத்தில் ஐ.நாவின் செயற்பாடுகள் தொடர்பாக முறையான மீளாய்வு ஒன்றைச் செய்வதன் மூலமே பதிலைப் பெறமுடியும்.

அப்போது ஐ.நா பணியகம் ஆட்சேதங்கள் பற்றிய கணக்கெடுப்புகளை மேற்கொள்ள முயற்சித்தது. ஆனால் அது இலங்கை அரசாங்கத்தால் பெரும் சர்ச்சைகளுக்குள்ளாக்கப்பட்டது.

அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்த போது இலங்கை அரசாங்கம் எதிர்த்தது.

ஆட்சேதங்கள் எவ்வளவு, அது எப்படிக் கணக்கிடப்பட்டது என்பன போன்ற கேள்விகளை எழுப்பியது. இது எமது கவனத்தைத் திசைதிருப்பும் நடவடிக்கையாகவே இருந்தது.

தம்மால் கனரக ஆயதங்கள் பயன்படுத்தப்படவில்லை என்றும், எனவே பொதுமக்களின் இரத்தம் எதுவும் சிந்தப்படவில்லை என்றும் இலங்கை அரசாங்கம் வாதிட்டது.

ஆனால் அதற்கு முரணான வகையில் ஐ.நா அறிக்கை உள்ளது.

பெருமளவு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாகக் கூறும் அந்த அறிக்கையில், அரசபடைகளின் எறிகணைத் தாக்குதல்களிலேயே அதிகளவு இழப்புகள் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆனாலும் கனரக ஆயுதங்களை அரசபடைகள் பயன்படுத்துகின்றன என்ற பலத்த சந்தேகம் ஐ.நாவுக்கு அப்போது இருந்தது.

இறுதியில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதில்லை என்ற வாக்குறுதியை உலகத் தலைவர்களுக்கு இலங்கை அரசு வழங்கியது. ஐ.நா பொதுச்செயலருக்குக் கூட அந்த வாக்குறுதியை அளித்தது.

2009 ஜனவரி தொடக்கம் மே வரையான இறுதி 5 மாதங்களில் பலமுறை மீண்டும், இந்த வாக்குறுதியை அளித்த போதும் அவையெல்லாம் வெறும் பொய்களாகவே இருந்தன.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகளைத் தடுக்க ஐ.நா இன்னும் கடுமையான அழுத்தத்தைக் கொடுத்திருக்க வேண்டும் என்பதே எனது கருத்து. இதை நான் தனிப்பட்ட முறையில் எழுதியுள்ள நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

ஐ.நாவைப் பொறுத்தவரையில் இலங்கை விவகாரம் தொடர்பாக அதன் உறுப்பு நாடுகளிடம் ஒருமித்த கருத்து இருக்கவில்லை என்றே கூற வேண்டும்.

ஐ.நா பாதுகாப்புச் சபைக்குள்ளேயும் எதுவும் நடக்கவில்லை.

மனிதஉரிமைகள் பேரவைக்குள்ளேயும் எந்தவொரு முயற்சிகளும் இடம் பெற்றதாக எமக்குத் தென்படவில்லை. ஐ.நா தலைமைச் செயலகத்தில் என்ன நடக்கிறது என்பது கூட வெறும் ஊகத்துக்குரியவையாகவே இருந்தன.

ஐ.நா என்பது ஓர் இராணுவ நோக்கத்துக்கான அணியோ அல்லது அரசியல் ரீதியான அமைப்போ அல்லது கண்காணிப்புப் பொறிமுறையோ அல்ல.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஐ.நாவுக்கு அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்குரிய பங்கே உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அத்துடன் ஐ.நாவிடம் இருந்து பெரும் தலையீடுகள் எதுவும் ஏற்படுவதை அந்தக் காலகட்டத்தில் இலங்கை அரசு விரும்பவில்லை.

எனவே இறுக்கமானதும், அரசாங்கத்தினது கடும் அழுத்தங்களுக்கும் மத்தியில் இருந்து கொண்டு தான் ஐ.நாவின் மனிதநேய நிறுவனங்கள் செயற்பட வேண்டியிருந்தது.

இலங்கையின் போரில் பல்வேறு நாடுகள் பங்குபற்றியிருந்தன.

இலங்கை அரசுக்கு ஆயுதங்களை வழங்கிய நாடுகள், நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒத்துழைப்புகளை வழங்கிய நாடுகள் மற்றும் உதவுவதில் எல்லா வகையிலும் முன்னின்ற நாடுகள், குறிப்பாக இந்தியா என்று பெரும் பட்டியலே உள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை சுதந்திர காலம் முதல் இலங்கையுடன் பல பரிணாம உறவுமுறை தான் உள்ளது.

21ஆம் நூற்றாண்டில் இலங்கை மீதான செல்வாக்கை இந்தியா இழந்து வருகிறது என்றே கூற வேண்டும். இந்த விடயத்தில் சீனா மிக வேகமாக இலங்கையுடன் நெருங்கி வருகிறது.

இந்தியா இந்த விடயத்தில் சற்றுக் குழப்பிப் போயுள்ளது. அதனால் இலங்கைக்கு அது உதவுகிறது.

இறுதிக்கட்டப் போர்க்காலத்தில் இலங்கைக்கு பல்வேறு புலனாய்வு உதவிகளை இந்தியா வழங்கியுள்ளது.

போர் வலயத்தில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் பற்றி விபரங்களும் அதற்குத் தெரிந்திருந்தது.

பாதுகாப்பு வலயங்களுக்குள்ளேயும் மிக நன்றான புலனாய்வு வசதிகள் இந்தியாவுக்கு இருந்தன என்று தான் நான் நம்புகிறேன்.

அங்கிருந்த இழப்புகள் பற்றி இந்தியாவுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதன் விகிதாசாரங்கள் குறித்து அது கணித்துக் கொண்டிருந்தது.

இந்திய அரசாங்க மட்டத்தில் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாடு இருந்தது.

புலிகளின் தலைவர்கள் சரணடைவது தொடர்பான மத்தியஸ்த நடவடிக்கைளில் நான் ஈடுபட்டிருக்கவில்லை.

அந்தக்கட்டத்தில் உயர்மட்டம் முதல் அடிமட்டம் வரை பலதரப்பினருக்கிடையில் பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டிருந்தன.

கடைசி வாரத்தில் புலிகளின் தலைமைத்துவம் பௌதிக ரீதியில் பிரிந்து காணப்பட்டது. பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து அவர்கள் வெவ்வேறான திசைகளில் தப்பிச்செல்ல முற்பட்டார்கள்.


புலிகளின் தலைவர்கள் சரணடையும் விவகாரத்தில் விஜய் நம்பியாரும் ஈடுபட்டிருந்தார் என்ற தகவல் உள்ளது. அதில் சூழ்ச்சிகள் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

அங்கே ஏதும் சூழ்ச்சிகள் தேவைப்பட்டிருக்கும் என்று நான் கருதவில்லை. எஞ்சியுள்ள தலைவர்களை சரணடையுமாறு தூண்டுதல் ஒன்று கொடுக்கப்பட்டதாகவே நான் கருதுகிறேன்.

சரணடைந்தவர்கள் சில காரணங்களுக்காக கொல்லப்பட்டு விட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சம்பூரிலுள்ள தமிழர்கள் காணிகளை இந்தியாவிற்கு தாரைவார்ப்பது துரோகம்

## என்கிறது ஜே.வி.பி




(மட்டக்களப்பு)

சம்பூர் பிரதேசத்திலிருந்து தமிழ்க் குடும்பங்களை வெளியேற்றி விட்டு அக்காணிகளை அனல் மின்னிலையம் அமைப்பதற்காக இந்தியாவிடம் ஒப்படைப்பது துரோகத்தனமான செயலாகும் என்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை திருகோணமலை ஆண்டாங்குளம் ஓஷன் விடுதியில் ஜே.வி.பியின் கிழக்கு மக்கள் அமைப்பினால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் ஜே.வி.பியின் முன்னாள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகர அரசாங்கத்தின் துரோகத்தனமான இச்செயலுக்கு இடம்கொடுக்கக்கூடாது என்று மக்களைக் கேட்டுக் கொண்டார்.

பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களை வெளியேற்றி விட்டு அவர்கள் வாழ்ந்து வந்த காணிகளை வெளிநாடுகளுக்கு தாரைவார்ப்பதற்கு மக்கள் இடமளிக்கக் கூடாது என்று அவர் தெரிவித்தார். சம்பூர் பிரதேச மக்களின் இன்றைய அவல நிலை கிழக்கு மாகாணத்திலும் பரவலாகக் காணப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சம்பூர் தமிழ்க்குடும்பங்கள் தங்களை மீண்டும் சொந்தக் கிராமங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கேட்பதற்கு அச்சப்பட்டு பயந்த நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இது வேதனைக்குரியது என்றும் அவர் தெரிவித்தார். கிழக்கு மக்கள் அமைப்பின் செயற்குழு உறுப்பினர் அருட்பிரகாசம் பிரசாத் மற்றும் உபாலி குமாரதுங்க ஆகியோரும் அச்சந்திப்பில் பங்குபற்றினர்.

# மேமாதம் வரை மழை தொடருமென வானிலை அவதானிப்பு நிலையம் அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதி வரை தற்போதைய பருவக்காற்று மழை தொடருமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழைபெய்யும். இன்னும் சில நாட்களுக்கு மேல்மாகாணம் மற்றும் தென்மாகாணத்தில் காலை வேளையில் மழைபெய்யும். நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடும் மழை பெய்யுமென்று எதிர்பார்க்கப்படுவதாக கடமையிலுள்ள வளிமண்டலவியலாளர் கயன்ன ஹெந்தவிதாரண கூறினார்.

இதேவேளை,கடும் மழை காரணமாக 10 நீர்ப்பாசனக் குளங்களின் வான்கதவுகள் நேற்றுமுன்தினம் திறந்து விடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. நேற்று 15 நீர்ப்பாசனக் குளங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

# எஸ்.எம்.எஸ் முறைப்பாடு புதிய நடைமுறை அறிமுகம்

(கொழும்பு)

தொலைபேசி குறுந்தகவல் மூலம் காவல் நிலயைத்தில் முறைப்பாடு செய்யக் கூடிய வசதி விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் வழிகாட்டல்களின் மூலம் இந்தத் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தப் புதிய திட்டம் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மிகவும் துரித கதியில் முறைப்பாடுகளைச் செய்வதற்கு இந்த முறைமை உதவும் எனவும் மக்கள் போலியான முறைப்பாடுகளைச் செய்யக் கூடாது எனவும் இவ்வாறு போலியான முறைப்பாடுகளை மேற்கொள்வோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும என்றும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# தயா, ஜோர்ச் மீதான விசாரணை நிறைவடைந்ததாக அறிவிப்பு



(கொழும்பு)


புலிகளின் ஊடகப்பேச்சாளர் தயா மாஸ்டர் மற்றும் மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் மீது மேற்கொண்ட விசாரணைகள் முடிவுக்கு வந்துள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

பிணையில் விடுதலை செய்யப்பட்ட இவர்கள் மீதான வழக்கு நேற்று கொழும்பு நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி முன்னிலையில் இடம்பெற்றது.


சந்தேகநபர்கள் இருவரும் ஏப்ரல் 23ஆம் திகதி ஓமந்தையில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் மீது மேற்கொண்ட விசாரணைகள் முடிவடைந்துள்ளதாகவும், மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறுவதற்காக விசாரணை அறிக்கை இந்த மாதம் 20ஆம் திகதி சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார். எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விமானக்கடத்தல் முயற்சி நடுவானில் முறியடிப்பு



இத்தாலியை சேர்ந்த அலிடாலியா நிறுவன விமானம் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் இருந்து ரோம் நகருக்கு புறப்பட்டு சென்றது. அதில் ஏராளமான பயணிகள் இருந்தனர். விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தது. அப்போது ஆண் பயணி ஒருவர் பலமாக சிரித்தபடி திடீரென எழுந்தார்.

பணியில் இருந்த விமான பணிப்பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்தார். இந்த விமானத்தை லிபியா தலைநகர் திரிபோலிக்கு திருப்ப வேண்டும். இல்லா விட்டால் இவரின் கழுத்தை அறுத்து கொலை செய்வேன் என மிரட்டினார். இதனால் விமானப் பயணிகள் பீதி அடைந்தனர்.

இதற்கிடையே மற்ற விமான ஊழியர்கள் அவரிடம் நைசாக பேச்சு கொடுத்த படியே அவரை மடக்கி பிடித்தனர். இது குறித்து ரோம் நகர பொலீசுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பின்னர் விமானம் அங்கு தரை இறக்கியவுடன் அந்த நபர் பொலீசாரால் கைது செய்யப்பட்டார். விசாரணையில் அந்த நபர் 48 வயதான கஜகஸ்தானை சேர்ந்தவர் என்பதும் அவர் பாரீசில் வேலை பார்ப்பதும் தெரிய வந்தது. இதற்கிடையே கத்தி முனையில் பிணைக்கைதியாக பிடித்து வைக்கப்பட்டிருந்த விமான பணிப் பெண்ணுக்கு லேசான காயம் ஏற்பட்டது. அவருக்கு ரோம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

# கிழக்கில் ஆசிரிய இடமாற்றம்

(மட்டக்களப்பு)

கல்முனையைச் சேர்ந்த மூன்று கல்வி வலயங்களில் மேலதிக ஆசிரியர்களாக கடமையாற்றும் 716 பேரை கிழக்கு மாகாணத்தில் பற்றாக்குறையாக உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேறு வலயங்களுக்கு மே மாதம் முதல் இடமாற்றம் செய்யப்படுவர் என கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. நிஸாம் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் 106 ஆசிரியர்களும் சம்மாந்துறை கல்வி வலயத்தில் 275 ஆசிரியர்களும் கல்முனை கல்வி வலயத்தில் 335 ஆசிரியர்களும் தேவைக்கு மேலதிகமாக வுள்ளனர்.

இதேவேளை அம்பாறை கல்வி கோட்டத்தில் சிங்களமொழிமூல ஆசிரியர்கள் அம்பாறை கல்வி வலயத்தில் 301 பேரும், தெகியத்த கண்டியவில் 39 பேரும் மேலதிகமாக உள்ளனர்.

இதேவேளை கிண்ணியா வலயத்தில் 254 பேரும், மூதூர் வலயத்தில் 197 பேரும் மட்டக்களப்பு மத்தியில் 173 பேரும், கல்குடா வலயத்தில் 118 பேரும் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்.

இவ்வலயங்களுக்கு கல்முனை கல்வி கோட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படும் கல்வி வலயங்களில் இருவருடங்கள் கட்டாயக் கடமையில் ஈடுபடவேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் இடமாற்றம் வழங்கப்படுமெனவும் 53 வயதுக்கு மேற்பட்டோரும், கர்ப்பிணிதாய்மாரும் 2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் நியமனம் பெற்றோரும் இவ் இடமாற்றத்தில் உள்ளடக்கப்படமாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆசிரியர் இம்மாற்றங்களை மேற்கொள்வதற்கான அனுமதியை கிழக்கு மாகாண ஆளுனர் வழங்கியுள்ளதாகவும் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி சுதந்திரமான முறையில் இவ் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுமெனவும் இது தொடர்பாக ஆசிரியர் சங்கங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

# சுசந்திகாவின் கணவர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

இலங்கையின் பிரபல ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்கவின் கணவரான தம்மிக்க நந்தகுமார ஹொரணை நீதவான் நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

சுசந்திகா ஜயசிங்க தனது கணவரான தம்மிக்க நந்தகுமாரவினால் தாக்கப்பட்டதாகக் கூறி, பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார். கடந்த 22ஆம் திகதி தம்மிக்க நந்தகுமார தனது சட்டத் தரணியுடன் ஹொரணை நீதவான் நீதிமன்றில் ஆஜராகியிருந்த நிலையிலேயே, அவர் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# விசேட விமானசேவை சாயி பக்தர்களுக்காக

(கொழும்பு)

ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் இறுதிக் கிரியைகளில் பங்கேற்பதற்காக குழுவாக இந்தியா செல்ல விரும்பும் பக்தர்கள் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், அதற்கென விஷேட விமான சேவைகளை ஒழுங்கு செய்ய சிறிலங்கன் விமான சேவை தயாராக உள்ளதாக விமான சேவைகள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன அறிவித்துள்ளார்.

இதற்கான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

சாயிபாபாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக ஆயிரக் கணக்கான பக்தர்கள் புட்டபர்த்தி நோக்கி படை எடுத்த வண்ணம் உள்ளனர். புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் சாய் குல்வன்ந் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள சாயி பாபாவின் இறுதிக் கிரியைகள் புதன்கிழமை இடம்பெறும்

## இலங்கை மீது..

மேலும் இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, ஆடைகள் என்பனவும் பெரும்பாலும் நேட்டோ அங்கத்துவ நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுவதன் காரணமாக அவற்றின் ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டு, பொருளாதார நெருக்கடியொன்றும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் எதிர்வு கூறப்படுகின்றது.

## மிருசுவில்...

தொடர்பாக ஐந்து இராணுவ வீரர்களுக்கு எதிராக பிரஸ்தாப வழக்குத் தொடரப்பட்டுள்ளது. வழக்கு தற்போதைக்கு ட்ரையல் அட்பார் முறையில் மூன்று நீதிபதிகள் குழாமினால் விசாரிக்கப் படுவதுடன், வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள் சம்பவம் நடைபெற்ற இடத்தை நேரடியாகப் பார்வையிட்டு மேலதிக விபரங்களைச் சேகரித்துக் கொள்ளவுள்ளனர்.

அத்துடன் வழக்கின் சாட்சிகளான யாழ். மாவட்ட நீதிபதி, சாவகச்சேரி நீதிபதி, தற்போதைக்கு வெல்லவ பொலிஸில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆகியோரையும் நாளையதினம் சம்பவம் நடந்த இடமான யாழ். மிருசுவிலுக்கு வருகை தருமாறு கொழும்பு பிரதான நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மேலும் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஐந்து இராணுவத்தினரையும் கொழும்பிலிருந்து சம்பவ இடத்திற்கு அழைத்துச் செல்லும் பொறுப்பையும் வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

வழக்கு விசாரணைக்காக வரும் சாட்சிகள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள், நீதிபதிகள் ஆகியோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

## அவசரகாலச்சட்டம்...

நீதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்ததன் பின்னர் இந்தச் சட்டத் திருத்தங்கள் அமுல்படுத்தப்படும் என அறிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அமரர் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர், தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் அவசர காலச் சட்டம் நீடிக்கப்பட்டு வருகின்றது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதனைத் தொடர்ந்து அவசர காலச் சட்டத்தை நீக்குமாறு சிலர் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2010ஆம் ஆண்டு மே மாதத்தில் அவசரகாலச் சட்டத்தில் சில சரத்துக்கள் தளர்த்தப்பட்டன.

பிரசார மற்றும் ஊரடங்கு தொடர்பான சரத்துக்கள் நீக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியன நீக்கப்படவேண்டுமென ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு வலியுறுத்தியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

இந்த ஆண்டிலும் அவசர காலச் சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு பாதகமாக அமையக் கூடிய சில சரத்துக்கள் நீக்கப்பட உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு இடையூறாக அமைந்த பல சரத்துக்கள் ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள அவசரகாலச் சட்டம் தொடர்பான விவாதத்தில் மேலும் இந்த சட்டத்தில் தளர்வு ஏற்படுத்தப்படும் என அவர் சுட்டிக காட்டியுள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்த சட்டங்கள் மட்டுமே தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.


யுத்தத்தின் போது சரணடைந்த பெரும் எண்ணிக்கையிலான புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், விடுதலை செய்யப்பட்ட சிலர் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தினால் மீளவும் கைது செய்ய நேரிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

சில சர்ச்சைக்குரிய நபர்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதாகவும் இவர்களைக் கைது செய் வதற்கு அவசரகாலச் சட்டம் தேவைப் படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கு...

தொடர்பான விவகாரத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையெனவும், காணாமல் போன கடற்படையினர் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருவதாகவும் கடற்படையின் பேச்சாளர் குறிப்பிட்டார். இதேவேளை, மேற்குப் பிராந்திய கடற்படையின் கட்டளைத் தளபதியாக ரியர் அட்மிரல் தமயந்த ஜயனெத் தர்மசிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையின் பேச்சாளர் மேலும் கூறினார்.



## மாணவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கழுத்தில் சுருக்கிட்டு இறந்ததாகத் தெரிவித்து மாணவன் ஒருவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாசியப்பிட்டி-சண்டிலிப்பாயைச் சேர்ந்த ரவிக்குமார் பௌசன் (வயது-18) என்பவரது சடலமே நேற்று நண்பகல் உறவினர்களாலும், பொலிஸாராலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர் யாழ்.நகரிலுள்ள பிரபல பாடசாலையான சென். ஜோன்ஸ் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்பவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (கா)

## இலவச கண் சிகிச்சை முகாம்
## 52ஆவது படைப்பிரிவு உதவி



(வடமராட்சி)

வடமராட்சி மற்றும் தென்மராட்சி பிரதேச பாடசாலை மாணவர்களுக்கும், அப்பிரதேச பொதுமக்களுக்கு மான இலவச கண் சிகிச்சை நிலையம் மற்றும் மூக்குக் கண்ணாடி இலவசமாக வழங்கும், சமூக நலன்புரிச் செயற்திட்டமொன்றும் கொழும்பு அபிவிருத்தி லொத்தர் சபையின் உதவியுடன் கடந்த சனிக்கிழமை வரணியின் 52 ஆவது பாதுகாப்பு படைப்பிரிவால் வரணி மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது.

இதற்கமைய 250,000 ரூபா செலவில் பாடசாலை உபகர ணங்கள் மற்றும் மூக்குக் கண்ணாடிகள் என்பன நன்கொடையாக வழங்கப்பட்டன. அதே நேரம் அபிவிருத்தி லொத்தர் சபையினால் வழங்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள் உள்ளடங்கிய பொதிகள், 522 மற்றும் 523 ஆம் படைப்பிரிவு பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. கண் சிகிச்சைகளில் இராணுவத்தின் வைத்தியப் பிரிவினரும் கலந்து கொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் 52ஆவது படைப்பிரிவின் பொதுக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுதா சிங்ஹ, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் ஐ.ஆர்.டபிள்யு திசாநாயக்க மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

## அழிந்துபோன ஆவணங்கள் மீளப்பெறுவதற்கு ஏற்பாடு
### முல்லையில் நடமாடும் சேவை



(முல்லைத்தீவு)

சுனாமி, யுத்தம் என்பனவற்றின் விளைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி, பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள் பெருமளவில் அழிந்தும், தொலைந்தும் போய்விட்டன. ஆகையால், அவற்றை உரியவர்கள் மீளப்பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டம் இங்குதான் நடந்து முடிந்தது. சுனாமிப் பேரலை அனர்த்தமும் இங்கு நடந்திருக்கின்றது. அவற்றின் விளைவாக இங்கு வாழ்ந்த மக்கள் தமது பூர்வீக வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அதனால் அவர்கள் 'தமது காணி உறுதிகளையும், பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களையும், திருமணப் பதிவுச் சான்றிதழ்களையும் ஏனைய முக்கிய ஆவணங்களையும் இழந்துவிட்டார்கள். இதன் காரணமாக அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என அவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் தொடர்பு கொண்டு அவ்வாறான ஆவணங்களை அவற்றிற்கு உரிய மக்கள், மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடமாடும் சேவையொன்றை முல்லைத்தீவில் நடாத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, அழிந்துபோன அல்லது தொலைந்து போன காணி உறுதிகள், அனுமதிப்பத்திரங்கள் என்பனவவற்றைப் பெற காணிப் பதிவகம், நில அளவைத் திணைக்களம் என்பன முறையாக செயல்பட வேண்டும்.

அதற்கு முன்னோடியாக நடமாடும் சேவையொன்றின் அவசியம் உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### தந்தை செல்வா...

நிகழ்சியாக சர்வமதப் பிரார்த்தனையுடனான அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். அதனைத்தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதியும் யாழ்ப்பாணம் சிந்தனைக்கூடம் எனும் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் இயக்குனருமான பேராசிரியர் இரா. சிவசந்திரன் அவர்கள் 'தமிழர் நிலத்தின் விவசாய அபிவிருத்தியும் நீர்வளப்பயன்பாடும்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார். இந் நிகழ்வுகளை தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

### போர்க்குற்றம்...

நூற்றாண்டின் மிகப் பெரும் இராஜதந்திரியுமான ஜிம்மி கார்ட்டர், மியன்மாரின் ஜனநாயகத் தலைவி அவுன்சான் சூகி, முன்னை நாள் ஐ.நா. செயலளார் நாயகம் கொபி அன்னான், முன்னாள் பின்லாந்து ஜனாதிபதியும் நோபல் பரிசு பெற்றவருமான மார்டி அதிசாரி, முன்னை நாள் ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையாளரும், முன்னாள் அயர்லாந்து ஜனாதிபதியுமான மாரி ரொபின்சன், தென்னாபிரிக்காவின் பிரபல பிஷப் டெஸ்மன் டுட்டு ஆகியோரும் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளனர். இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக சுயாதீன விசாரணையொன்றின் அவசியம் குறித்து அவர்களால் விடுக்கப்படவுள்ள அறிக்கையானது, சர்வதேச அளவில் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைகளுக்கு இன்னுமொரு உந்து சக்தியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பயங்கரவாதத்துக்கு ஊக்க மருந்து
## ஐ.நா. அறிக்கையை சாடுகிறார் சம்பிக்க



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நடவடிக்கைகள் பயங்கரவாத அமைப்புக்களுக்கு உந்து சக்தியாக அமையக் கூடுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் பாடலீ சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அல் கொய்தா போன்ற தீவிரவாத அமைப்புக்களுக்கு மறைமுக ஆதரவினை வழங்கும் வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பலம்பொருந்திய நாடுகளின் ஒத்துழைப்பின்றி, மிகவும் கொடிய பயங்கரவாத அமைப்பொன்றை யுத்த ரீதியாக தோற்கடித்த ஒரே நாடாக இலங்கை திகழ்கின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனநாயக ரீதியில் ஆட்சிப் பொறுப்பை பெற்றுக் கொண்ட இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க முடியும் என்பதனை உலகிற்கு எடுத்துரைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சில தீவிரவாத அமைப்புக்களின் நடவடிக்கைகள் பின்னடைவை எதிர் நோக்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளின் பல்வேறு நடவடிக்கைகளை உலகின் ஏனைய தீவிரவாத அமைப்புக்கள் பின்பற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னர் உலகின் ஏனைய நாடுகளின் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

### லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் கைது

(கொழும்பு)

லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் ஊடகவியலாளரான சாந்த விஜேசூரிய நேற்று மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். நீதிமன்றத்தை அவமதிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூகொட நீதிவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவின் பிரகாரம் கிரிந்திவெல பொலிஸாரால் மேற்படி ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை பூகொட நீதிவான் நீதிமன்றில் இன்று ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## இடமாற்ற உத்தரவால் பாதிப்பு; ஆசிரியர்களுடன் விசேட சந்திப்பு
### உரிய தீர்வு நோக்கிய நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களின் இடமாற்ற உத்தரவு காரணமாக பாதிப்புக்குள்ளான ஆசிரியர்களுடனான விசேட சந்திப்பொன்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் (கமல்) தலைமையில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து வேறு மாவட்டங்களுக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பாக யாழ்.வலயக் கல்விப்பணிமனையினால் இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்தன. இவ் இடமாற்ற உத்தரவுகளில் பல்வேறுபட்ட காரணங்களை முன்னிறுத்தி தமது இடமாற்ற உத்தரவை இரத்துச் செய்து தருமாறு யாழ்.மாவட்டத்தில் இருந்து வேறு மாவட்டங்களுக்கு இடமாற்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அக் கோரிக்கைகளுக்கு அமைய மேற்படி இடமாற்ற உத்தரவை மீள்பரிசீலனைக்கு உட்படுத்துமாறு வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பணித்திருந்தார். இதனால் யாழ். மாவட்டத்தில் இருந்து வேறு மாவட்டங்களுக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதனை மட்டுமன்றி, வேறுமாவடடங்களில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தமது பணியினை பொறுப்பேற்பதனையும் கல்விப் பணிமனை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது கடமையினை மேற்கொள்வதற்கு வழிவகையினை ஏற்படுத்தித் தருமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் தொலைபேசி மூலமாகவும், ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்களிடமும் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது கோரிக்கையினை முன் வைத்திருந்தனர்.

இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் கோரிக்கை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வெகுவிரைவில் இதற்கான தீர்வினைப் பெற்றுத்தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தொலைபேசி மூலமாக உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

### மோட்சம் கிட்டட்டும் மகிந்த அஞ்சலி

உலக மக்களுக்கு அருளும், உன்னதமான சேவைகளும் செய்த சத்திய சாயி பாபாவுக்கு மோட்சம் கிட்டட்டும் என பிரார்த்திக்கிறேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சத்ய சாயி பாபா சமாதி அடைந்தமையையடுத்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தலைசிறந்த பண்புகளைக் கொண்ட சாயி பாபாவை அவர்களின் பக்தர்கள் என்றும் மறக்க மாட்டார்கள் எனவும் சத்திய சாயிபாபா அவர்களுக்கு மோட்சம்கிட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் ஆயுதக் களஞ்சியம் மட்டக்களப்பில் சிக்கியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-மாங்கேணியில் புலிகளின் பாரிய ஆயுதக களஞ்சியமொன்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக கடற்படையினர் கூறுகின்றனர்.

மாங்கேணிக்குளம் பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த ஆயுதக் களஞ்சியம் காணப்பட்டதாக கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

பல்வேறு வகையான துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் பெருந்தொகையான ரவைகள், பல்ரக துப்பாக்கி வகைகள், குண்டெறி கருவிகள், கைக்குண்டுகள் உள்ளிட்ட பெருந்தொகையான குண்டு வகைகள், தொலைத்தொடர்புக் கருவிகள், அதியுயர் தொழில்நுட்ப தகவல் பரிமாற்றக் கருவிகள், தகவல் பரிமாற்றக் கருவிகளுக்கான அலைவரிசை சீராக்கி அன்டெனாக்கள், புலிகளின் இடைப்பட்டிகள், கிளைமோர் குண்டுகள், விமான எதிர்ப்புக் குண்டுகள் என்பன பெருந்தொகையில் அங்கிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக படையினரின் ஊடகக் குறிப்பு கூறுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.